
# விவேகி

VIVEKI 1.6.67 40 சதம்




"அத்தான்!...இந்தப் படத்தின் ஓவியரை உடனடியாகப் பார்க்க வேண்டுமே! "

'என் ... லா? ..ஏதாவது ஓட்டோகிராப் வாங்கப் போறியா?..."

"இ... அத்தான்!...இந்தப் படத்திற்கு மேல் பக்கம் எதுவென்று ...

விவேகி

மலர் : 8 இதழ் : 6

கௌரவ ஆசிரியர்:
மு. வி ஆசீர்வாதம் ஜே. பி

நிர்வாக ஆசிரியர்:
மாட்டின்

ஆசிரியர்கள்
செம்பியன் செல்வன்
செங்கை ஆழியான்

# உணர்வார்களா?

பல்கலைக் கழகங்கள் ஒவ்வொரு நாட்டின் உயர்ந்த கல்விப் பீடங்களாக மட்டுமல்லாது சிறந்த சிந்தனையாளர்களின் கூட்டங்களாகவும் விளங்குகின்றன.

அங்கிருந்து வெளியாகும் சிந்தனைகள், கருத்துக்கள் அனைத்தும் பொறுப்பும் கண்ணியமுமிக்கனவாகவே விளங்கும். இதனால், கல்வியினடிப்படையில் செயற்படும் ஒவ்வொரு ஆராய்வும், வெளியிடப்படும் பயனுடைய சிந்தனைகளும் நாளடைவில் நாட்டின் தனிச் சொத்துகளாக மாறிவிடுகின்றன. அத்துடன் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியாகும் கருத்துக்களுக்கு ஒரு தனிமதிப்பும், கௌரவமுமுண்டு.

ஆகவே பல்கலைக் கழக கருத்து வெளியீடுகளில் தனிமனிதர்களின் காம குரோத விருப்பங்கட்கு இடமில்லை. உண்மையொன்றிறகே இடமளிக்கப்படும்.

ஆனால் —


நம்நாட்டு பல்கலைக்கழக கருத்து வெளியீடுகளை அவதானிக்கும்போது, உண்மைகள் மறைக்கப்பட்டும், திரிக்கப்பட்டும், வெளியாவதை உணரக்கூடியதாக உள்ளது.

இத்தகைய உண்மைகளின் திரிபு வாதக் கொள்கை முதலில் பேராசிரியர்களிடம் காணப்பட்டது; இன்று இது பல்கலைக்கழக மாணவர்கள் வரை வந்துவிட்டது.

இன்றுள்ள அரசியற் பொருளாதாரக் காரணிகள் இவற்றிற்கு உரமளித்தபோதும், இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தால் —

நாட்டின் உண்மையான வரலாறு, வருங்கால சந்ததிகட்கு மறைக்கப்பட்டுவிடும்.

இவர்தான் ☞



# பத்திரிகைப் பிரகாசம்

யாழ். டெய்லி நியூஸ் காரியாலயத்தின் மனேஜர் திரு. பி.ஏ. பிரகாசம் சமீபத்தில் யாழ். நீதிபரிபாலன பகுதிக்கு ஓர் சமாதான நீதவாணுக, கூடுதலான மாவட்ட நீதிபதி திரு. ஜி. ஸி. நைல்ஸ் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சமூகத் தொண்டு, வேதத்தொண்டு தேசத்தொண்டு ஆசிரியத்தொண்டு ஆகியவற்றில் பிரசித்திபெற்ற காலஞ்சென்ற திரு. பி. ஆபேல் அவர்களினதும், சமீபத்தில் காலஞ்சென்ற திருமதி லவுரேன்சியா பொன்னம்மா ஆபேல் அவர்களினதும் கனிஷ்ட புதல்வராவர். அச்சுமாநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் லேக்ஹவுஸ் ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் திரு. டி ஆர். விஜயவர்த்தனு அவர்களின் கீழ் 28 வருடங்களுக்கு முன்னதாக ஓர் தமிழ் மொழி பெயர்ப்பாளராக உத்தியோகம் ஆரம்பித்து, கொழும்பு மாநகரிலிருந்த 17 வருடங்களிலும் கொழும்பு ஹார்பர் போட்மென் சங்கத்தின் காரியதரிசியாக இருந்து அவர்களுக்கு பல சலுகைகளை பெற்றுக் கொடுக்க உதவியாயிருந்தார். கொச்சிக்கடை புனித அந்தோனியார் சங்கத்திலும் ஈடுபட்டு உழைத்துவந்தார்.


கடந்த 11 வருடங்களாக யாழ். டெயிலி நியூஸ் காரியாலயத்தில் மனேஜராக இருக்கும் காலத்தில் யாழ். மாவட்டத்தில் கலை, விளையாட்டுப் பகுதிகளில் அரும் பெரும் சேவைகள் செய்து



வந்துள்ளார். வடபகுதியில் மாபெரும் கலைவிளையாட்டுவிழாவாக புகழப்பட்டுவரும் வருடாந்த தினகரன் விழா நிகழ்ச்சிகளை கடந்த 9 வருடங்களாக வெற்றிகரமாக நடாத்தி விளையாட்டுப் பகுதியினர்களுக்கு உதவியளித்து வருகிறார். யாழ். விளையாட்டு அரங்குச் சங்கத்தில் உதவிக் காரியதரிசியாக இருந்து யாழ்விளையாட்டு அரங்கை ஸ்தாபிப்பதில் நன்கு ஒத்துழைத்தது மன்றி, தற்பொழுது அதன் ஆலோசனைச் சங்கத்தில் அங்கத்துவம் வகித்தும் வருகின்றார்.

பொது மக்களின் முன்னேற்ற இயக்கங்களிலும் மற்றும் ஸ்தாபனங்களிலும் திறம்பட உழைத்து பல்வேறு ஸ்தாபனங்களிலும் நிர்வாகப் பொறுப்பான பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கைதடி அரசாங்க வயோதிபர் மடத்துக்கு உத்தியோகப்பற்றற்ற உத்தியோகஸ்தராக இருந்து வருகின்றார். பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தின் போஷகர், பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் காரியதரிசி. இன்றும் அநேககலை, சமய சங்கங்களில் வடபகுதியில் அங்கம் வகித்து வருகின்றார். சமூக சமய ஈடுபாடுகளில் நன்கு ஒத்துழைத்து யாழ். மாவட்டத்தில் உள்ள சகலரினதும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

தொடர்ந்து சமூக சேவைகளில் ஈடுபட்டு உழைப்பதற்கு வேண்டிய சுகபலத்தையும், நீடிய ஆயுளையும் எல்லாம் வல்ல இறைவன் புதிய சமாதான நீதிபதி திரு. பி. ஏ பிரகாசம் அவர்களுக்கு அளிக்க விவேகி சார்பில் வேண்டுகின்றோம்.



## தேனிலவு அனுபவம்

ஒருத்தி: "எனது தேனிலவில் நான் காஷ்மீர் போயிருந்தேன்......"

மற்றவள்: "உன் கணவன் எப்படித் தேனிலவை ரசித்தார்?"

ஒருத்தி: "நீ கணவனுடனா தேனிலவிற்குப் போவாய்"

— சூரியகலா

◉

## எண்ணம்தான்

எண்ணந்தான் செயலுக்கு வித்து என்று சொல்கிறார்கள். கெட்ட எண்ணங்கள் செயலாவது எளிது. நல்ல எண்ணங்கள் செயலாவது அவ்வளவு எளிதாக இல்லை. கெட்ட எண்ண வித்துக்கள் பெரும்பாலும் எல்லாமே செயலாக முளைத்துவிடுகின்றன. நல்ல எண்ணவித்துக்கள் சிலவே செயலாக முளைக்கின்றன; பல அழிந்து மறைகின்றன.

— இ. சந்திரசேகரன்

◉

## பெர்னாட்ஷாவின் நகைச்சுவை

பெர்னாட்ஷா அவர்களையும், அவரது மனைவியையும், கூட்டமொன்றில் பேச அழைக்கப்பட்டது. கூட்டத்தில், பெர்னாட்ஷா பேசும் பொழுது: "பெண்கள் சுவர்க்கத்தைத் தேடிச் சென்று நரகத்தை கொண்டு வருவார்கள் ஆனால் ஆண்கள் அப்படிப் பட்டவர்கள் அல்ல. அவர்கள் நரகத்தைத் தேடிச் சென்று, சுவர்க்கத்தைக் கொண்டு வருவார்கள்." என்றார்.

இவரை அடுத்துப் பேசிய இவரது மனைவி, "எனது கணவர் கூறியது முற்றிலும் உண்மை நான் சுவர்க்கத்தைத் தேடிச் சென்று, இவரைக் கணவராக அடைந்தேன். எனது கணவர், நரகத்தைத் தேடிச் சென்று, என்னை மனைவியாக அடைந்தார்" என்றாள். கூட்டத்தில் எழுந்த சிரிப்பு அடங்க, சில நிமிடங்கள் பிடித்தன.

— அ. கனகசூரியர்

◉

## இரு முனைகள்

இன்று ஈழத்தில் இறக்குமதியாகும் நூல்கள் இரு திறத்தினவாகவுள. ஒன்று, மர்மத் துப்பறியும் சிருங்கார நாவல்கள்! மற்றது-பக்தி இலக்கிய நூல்கள்! இலக்கியத்தில் இரு துருவ நூல்களான இவை இறக்குமதியாகின்றனவே தவிர, சம கால ஆக்கபூர்வமான இலக்கியங்கள் இறக்குமதியாவது கிடையாது.

— யேக்கப்

◉

## ஒருபக்க விஷயம்

நகைச்சுவை எழுத்தாளரான மாக்டுவைன் ஒரு பத்திரிகை நடத்திக் கொண்டிருக்கும்போது அச்சகத்தினருக்கு ஏராளமான கடன் கொடுக்க வேண்டி இருந்தது. அச்சகத்தார் பலதடவை நினைவுபடுத்தியும் கவனிக்கவில்லை. ஒரு தடவை 'பில்'லை அனுப்பும்போது அதன் மறு புறத்தில் 'இம்முறை பணம் செலுத்தாவிடில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று குறித்திருந்தனர். அதற்கு அவரின் பதில்: ''ஒருபக்கத்தில் தெளிவாக எழுதிய விடயங்களே எங்கள் அலுவலகத்தில் கவனிக்கப்படும்'' என்பதாம்.

◉

## த....ரி....ச...ன:...ம்!

இரசிகமணி கனக. செந்திநாதனின் 'தரிசனம்'எனும் சிறுகதைத் தொகுதியும், ஏ.ரி. பொன்னுத்துரையின் 'இறுதிப் பரிசு'எனும்நாடகமும்வே.குமாரசாமியின் கவிதை நூலொன்றும், பொ. சண்முகநாதனின் சிறுகதைத் தொகுதி ஒன்றும் வெளிவரவுள்ளன. இலங்கை எழுத்தாளர்ஆக்கபூர்வமாகச் செயற்படுவதை இவை குறிக்கின்றன.

◉

## பூ...மணம்

மிஸ். சுல்தானுவிற்குச் சனிக்கிழமை ஒரு விசேஷமான நாள். ஏனெனில், அவள் அன்று மாத்திரம் திருமணம் செய்வதில்லை.

— ஓர் அமெரிக்கப் பகிடி

# பங்குனிக் கனல் பதமற மறைந்ததும்

### வே. குமாரசுவாமி

பங்கு னிக்கனல்
பதமற மறைந்ததும், வேனில்
மங்கை என்பவள்
மிளிர்ந்தனள், உலகுளோர்
உவப்ப
எங்கும் இன்னிசை
குயிலெனும் குமரியர் பரவல்
பொங்க இன்புடன்
சிரிக்கிருள் சித்திரைச் சிட்டு

ஆடல் மங்கையின்
கரமெனும் தளிரதாம் துளிரின்
ஊடல் தீர்த்திட
எனவரும் மெருகுசேர்
தென்றற்
பாடல் ஓசையில்
வெண்ணிலா ஒளியிலே கூடி
வாடல் ஓட்டிட,
தழுவிடச் சித்திரை
வளைத்தாள்

பின்ப னிக்குளிர்
வெதுப்பினைப் பிறழ்த்திட,
பின்னர்த்
தென்ப ளித்திடப்
பிறந்தனள் பெருமுணர் ஆட்ட
பொன்க திர்வெயில்
பூத்திட வரும்இள வேனில்
தன்முனைப் பினல்
விடுக்கிருள் திருமண
அழைப்பு

★

துவிர்க்க முடியாத காரணத்தால் கலட்டி இம் மாதம் இடம் பெறவில்லை. வழக்கம் போல் அடுத்த இதழிலிருந்து வெளி வரும்.

★

# கல்விக்கண்கள்

இலங்கையிலேயே முதன் முதலாக, பார்வையற்ற ஒருவர் பட்டதாரியாகப் பட்டம் பெற்றுள்ளார். இலங்கையின் கல்வி வரலாற்றில், பிறப்பிலேயே கண் பார்வையற்ற ஒருவர் பட்டதாரியானது இதுவே முதல் தடவையாகும். தத்துவம், பொருளாதாரம், வரலாறு எனும் பாடங்களைத் தனது பட்டப்படிப்பிற்குரிய பாடங்களாகக் கொண்டு இந்த இளைஞர் பீ. ஏ. பட்டம் பெற்றதன் மூலம், கல்விக்கண்களைப் பெற்றுள்ளார்.

பெர்ணுட் என்ற இந்த வாலிபருக்கு வயது இருபத்தைந்து. தனது ஆரம்பக் கல்வியை இவர் ராகமவிலுள்ள சென். யோசேப் எனும் குருடர்களுக்கான கல்லூரியில் பெற்ருர். பின் இரத்மலானையிலுள்ள குருடர் கல்லூரியில் பெற்ருர். க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இவர் வெகுதிறமையர்கச் சித்தி பெற்ருர்; அப்பரீட்சையில் ஒரு மிகத்திறமையான புள்ளியும் (D), நான்கு திறமையான புள்ளிகளையும் (C) பெற்ருர். 1963-ம் ஆண்டில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் வெற்றி பெற்ருர்.

ஐந்து குழந்தைகளையுடைய குடும்பத்தில் பெர்ணுட் மூத்தவராவர் பெர்ணுட் கம்பீரமான தோற்றத்தையும் சாந்தம் தவழும் முகத்தையுமுடையவர். தனது குறையை அவர் ஒரு போதும் மனதிற் கொள்ளாது கல்வியில் தனது சிந்தையைப் பதித்து வெற்றி கண்டார்.

பெர்ணுட்டிற்குச் சங்கீதம் என்ருல் மிகவும் பிடிக்கும்; பியாஞேவை மிக அற்புதமாக வாசிப்பார்.

"எனது நண்பர்கள் எனது படிப்பிற்குப் பெருந்துணை நின்ருர்கள். பிரய்லி நூல்கள் (குருடர்களுக்கான நூல்கள்), கிராமபோன் றெக்கோட்டுகள் என்பன எனதுகல்விக்கு உதவின. எனது நண்பர்கள் பலர் பல நூல்களைப் படித்து ஆராய்ந்து எனக்கு விளக்கி உதவிஞர்கள். அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்' என்கிருர்

''அடுத்தது உங்கள் திட்டம் என்ன?'

''ஏதாவது தொழில் செய்து எனது குடும்பத்தினரைப் பேண விரும்புகின்றேன். என்னைப்போன்ற அந்தகர்களுக்கும் கல்விக்கண்களை அளிக்க விழைகின்றேன். நியூயோக் குருடர் கல்லூரியில் சேர்வதற்கான 'ஸ்கொலஷிப்' ஒன்றிற்கு எழுதியுள்ளேன். கிடைத்தால் போவேன்...''

''நியூயோக்கில் உங்கள் பார்வையைப்பெற முயல்வீர்களா...''

''நான் என்ன குருடா? எனக்கு அப்படி உணர்வில்லை'' என்கிருர் பெர்ணுட்.

ஆண்டவன் அவருக்கு எல்லா வரங்களையும் அளிக்க வேண்டுவோம்.

—நமது நிருபர்

# வாசகர் பார்வையில்

**அட்டைப் பட அருமை**

'விவேகி' தொடர்ந்து நல்ல முறையில் வெளிவருவது கண்டு மகிழ்ச்சி. 'சௌ'வின் அட்டைப் படங்கள் அருமையாய் உள்ளன. கொழும்பு பெரி. சண்முகநாதன் கனவுகள் தொடரட்டுமே!

இளம் எழுத்தாளர்களின் கனவை நனவாக்கிய தங்கள் முயற்சிக்கு எனது பாராட்டுதல்கள்.

'விவேகியி'ல் ஏற்பட்டிருக்கும் புதுவனப்பினை மிக மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். 'கந்தர் அம்மான்–செல்லாச்சி'' துணுக்கு அருமையாக இருக்கிறது. என்னை மிக மிகக் கவர்ந்துவிட்டது இப்பகுதி தொடரட்டும்.

யாழ்ப்பாணம் செல்வி பத்மா

**அட்டைப்பட 'சௌ'**

'....சௌ'வின் படங்கள் மிக மிக அற்புதமாகவுள்ளன. தக்க ஒருவர் விவேகியில் இணைந்தது பாராட்டிற்குரியது.

பேராதனை க. சுப்பிரமணியம்

**காதலில் தோல்வி**

...'சௌ'விற்குப் பெண்கள் மீது ஏன் இவ்வளவு ஆத்திரம்? காதலில் தோல்வி கண்டவரோ?

நீர்வேலி செல்வி த. வசந்தா

**சூடுபோடும் சௌ**

...ஆகா...ஆகா... சௌ பெண்களுக்குச் சரியான சூடு போடுகிறார். அவருடைய படங்களே சிரிக்க வைக்கின்றன.

சுட்டப்பிராய் ச. விசுவநாதன்

**வளர்பிறை**

...வ. அ. இராசரத்தினத்தின் குறுநாவல் தமிழ் ஆசிரிய குலத்தையும் அவர்களுடைய மன அவசங்களையும் நன்குபடம்பிடித்துக் காட்டுகின்றது சமீபகாலத்தில் ஈழத்தில் எழுந்த நாவல்களில் முதன்மையானது.

வவுனியா ஜெயபாலன்

...குருஸ் வாத்தியார் உன்னத படைப்பு. கதாபாத்திர வளர்ச்சியிலேயே கதையைக் கொண்டு சென்று முடித்திருப்பது சிறப்பாகவுளது.

மூளாய் ச. வல்லிபுரம் ஆசிரியர்

...சோக்கான கதை

யாழ்ப்பாணம் ஒரு ரசிகர்

**மணி...**

பூரணியின் மணிக்கதை பூரணமாகவேயுளது. நல்லதொரு கதை.

பூண்டுலோயா எஸ். பத்மா

......நந்திக்கடல் விறுவிறுப்பாகவும், சுவாரசியமாகவும் செல்கிறது. கதையில் 'தொடரும்' வாக்கியம் வரும்போது அடுத்த விவேகி எப்போது என்ற ஆவலைத் தருகிறது.

களுவாஞ்சிக்குடி
செல்வி நூருன்னிசா

**நன்றி**

...ஒலிவர் ருவிஸ்ட் எனது ஆங்கிலப்பாட வகுப்பிற்கு உதவியாக இருக்கிறது. ஆசிரியருக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் கூறுக.

கொள்ளுப்பிட்டி வி. லலிதி

## அமைதியின் இறகுகள்

'இதயக் குமுறல், அமைதியின் இறகுகள், நீரும், நிலமும், நெல்—ஆகியன எனக்கு மிகவும் பிடித்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் சிறக்கின்றன. பன்னிரண்டு கதைகளில்வரும் நாயகர்கள் நல்ல பண்போவியங்கள். ஈழத்தமிழ் வாழ்வு, இன்றைய பல்வேறு நிலைகள்—இவை இக்கதைகளுக்குப் புலமாகத் திறம்படக் கையாளப் பட்டிருப்பதே இக்கதைகளின் சிறப்புக்கு முக்கியமான காரணம் எனக் கருதுகின்றேன்.

'நெல்'-மாப்பிள்ளைக் கந்தரையும் 'நீரும் நிலமும்'—சின்னரையும் படைத்ததிற்காகவே நீங்கள் பெருமைப்பட்டுக்கொள்ளலாம்.

இன்னும் சிறப்பான படைப்புக்களை உங்களிடமிருந்து நம்பிக்கையோடு எதிர்பார்கிறேன்.

மிக்க அன்புடன்
சாலை இளந்திரையன்


## அந்தோனியார் மன்ருட்டு

புனித அந்தோனியாரின் பக்தர்களே!
புனிதரின் மன்ருட்டு மிகக் குறைந்தவிலையில் விற்பனைக்கு வெளிவந்துவிட்டது. புத்தகங்கள் தேவைப்பட்டோர் எனது விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விலை சதம் –/35

கிடைக்குமிடம்.

எஸ். எம். இன்னுசிமுத்து
உபதேசியார்
சென்தோமாஸ் சேர்ச்லேன்
மாதகல்

'ஒன்றுமில்லை... அவன் திருந்திவிட்டான்... அவனின் இரு சொட்டுக்கண்ணீரே பதில் சொல்லிவிட்டது.'

சோமசுந்தரம் தெல்லிப் பளையின் நீதியரசர். ஆனால் அவர் சட்டம் படிககவில்லை. கோட்டில் நீதியரசராக இருந்ததில்லை. கோட் வாசலுக்கு ஒரு விநாடி கூடப் போனதில்லை. ஆனால் அவரே அவ் வீதியிலுள்ள மக்களுக்கு நியாயம் வழங்கும் நீதியரசர். சோமசுந்தரத்திற்கு மக்களால் வழங்கப்பட்ட பட்டம் அது

''ஐயா என்ர புருஷன் என்னை விட்டு விட்டுக் காடேறி மாதிரித் திரிகிறார். அது மாத்திரமா... என்ர மகன் யாரோ ஒரு பொட்டையைக் காதலிக்கிறானாம். எனக்கு அவன் ஒருவன் தான் பொடியன். மற்ற ஐஞ்சும் பொடிச்சியள். அவன்தான் அதுகளைக் கரைசேர்ப்பான் என்றால்.. ம் அவனும் இந்த விளையாட்டில திரியிறான் ஐயா!.....'' கறுப்பாயியின் இடுப்பில் இரண்டு வயதுக் குழந்தை. அதன் மூக்கில் இருந்து வழிந்த சளியின் காரணமாய் கன்னங்கள் இரண்டிலும் வெண்மை. வலக்கையின் சின்னி விரலில் பத்து வயதுள்ள சிறுமி. பச்சைப் புடவை கிழிசல்களின் மறைப்புக்காக ஆங்காங்கே பல நிறத் துண்டுகள். அதன் தலைப்பில் உணவு இன்றியோ அல்லது வேறு காரணம் என்னவோ பருவ அழகிலிருந்து கழிக்கப்பட்ட கன்னியின் வரண்ட கரம். நீதியரசர் அவளின் குடும்ப நிலையில் தன் மனத்தைச் செலுத்தி இருக்க வேண்டும்.

''என்ன பிள்ளை சொன்னனி உன்ர புருஷன் உன்னை விட்டுட்டுப் போயிட்டானோ''

''ஓம் ஐயா''

''அவன் இங்கனேக்க உள்ள விறகுகாலையில் நிப்பான். உன் மகனை விட்டுத் தேடுறதுதானே!''

''மகன்!... அவனுக்கு நான் ஒன்றும் செய்யவில்லையாம். இந்த இரண்டு மாதமாய் கஞ்சிதான் வாத்திருக்கிறேன் எண்டு கோபம் ?...''

''ஏன் கறுப்பாயி ?...''

''அவன் வீட்டில் இருந்தால் தானே ?'' வெறுப்புணர்ச்சி மேலிட்டது குரலில்.

''எங்க அவன் ?''

''அந்தா பாருங்கோ! மரத்தோட மரமாய் நிற்கிறான் இண்டைக்கு அவனைக் கூட்டிக் கொண்டுவரப் பட்டபாடு!......''



'ராஜப் பிரியை'

## உள்ளும்

## புற

''வேலு இப்படி வாப்பா. உனக்கு ஏன் அப்பா இந்த வயதில காதல் கீதல். நான் உன்னைக் காதலிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. நீ காதலி அதே நேரததில் உன் சகோதரி களைப் பார். இவர்களை ஒரு வழி சேர்க்க வேண்டாமா?... ஐந்து பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு சொம்மாவால் என்ன செய்ய முடியும்? நீ ஐந்து பேரையும் கரை சேர்க்க வேண்டாமா?... என்னடா இவர் ஐந்து பெண்களையும் கரை சேர்க்கச் சொல்கிறுரே. அப்ப நான் ஐம்பது வயதிலையா கல்யாணம் முடிக்கிறது என்று நினைக்கிருய். அது தவறு தம்பி. உன் வீட்டில் இருக்கும் இரண்டு தங்கை மாரையும் கரை சேர்த்து விட்டு நீ காதலிச்சவளை முடியேன். உன்ர கொப்பனைப் பார் அவனும் கண்டபடியெல்லாம் திரியிருன். அவனை நான் கவனிக்கிறன் நீ உன்ர வீட்டுக்குப் போ''

அவரின் அன்பான அறிவுரைப் பேச்சில் அவன் உருகி விட்டான். அவன் கண்களிலிருந்து உதிர்ந்த இரு சொட்டுக் கண்ணீர் அவர் கையைச் சுட்டது.

0 0 0

"ஏன்னங்க நல்லாக் காத்துப் பிடிக்குது போல இருக்கு!... நீங்க தோட்டத்துக்கேயே நாள் முழுதும் இருந்திடுவீங்க போலிருக்கு!...... என்னங்க கையில... கையையே உத்துப்பாத்துக் கொண்டிருக்கிறீங்க'' மனைவியின் கேள்வியினுல் தன்னிலையடைந்து தலை நிமித்திய கணவனின் கண்கள் மின்னின.

''ஐயையோ!... என்னத்துக்குக் கண் கலங்குது? என்ன நடந்து விட்டது?''

''ஒன்றுமில்லை அவன் திருந்தி விட்டான். அவனின் இரண்டு சொட்டுக் கண்ணீரே பதில் சொல்லிவிட்டது.அகிலு சொல்லி

## அருமையான வீடு

**'சேந்தன்'**

வீடு நல்ல வீடு மெல்ல அசையும் வீடு
ஓடு போட்ட வீடு ஒழுகா தந்த வீடு.
கதவு யன்னல் இல்லை காற்று வெளிச்சம் இல்லை
உறவு பேசி யாரும் உள்ளே வருவ தில்லை
நாலு காலில் நகரும் நதியில் நீந்திச் செல்லும்
வாலும் தலையும் நாலு காலும் உள்ள வீடு
விந்தை மனிதா ஏனே விழித்துப் பார்க்கின்ருய்
ஐந்தடக்க விரும்பில் அதனைப் பார்த்துப் பழகு
பெருமை பேசி உள்ளே ஒருவர் வாழுகின்ருர்
அருமை யான வீடு ஆமை யாரின் வீடு.

விட்டது!" உணர்ச்சியுடன் கூறினர் அவர்.

கணவனுக்கு ஏற்ற பதிவிரதை அவள். கணவனின் மனம் இரக்கமுடையது. யாரோ ஒருவருடைய துன்பத்திற்காகக் கண் கலங்கிருர் என்றுணர்ந்து, அப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்த அவள் 'என்னங் மாலுவும் கலாவும் விடுதலேக்கு வாருங்களாம்" என்ருள்.

"மாமா வீட்டுக்குப் போகப் போகிறேன் என்று எழுதியிருந்தார்களே!..."

"அண்ணனும் பொஞ்சாதியும் கொழும்புக்குப் போகினமாம். வேலே விசயமாய். அது தான் மருமகப் பொடி ஸ்கூலுக்குப் போய்ப் பிள்ளேகளேக் கூட்டிக்கொண்டு வருகிருனும்."

"எப்ப வருகிருர்கள்?"

"இன்னும் ஐஞ்சு நாளேயில வருகினம். நேரம் போகுது சாப்பிட வாங்கோ!..."

"முருகா! என் பிள்ளேகளுக்கு மாத்திரம் காதல் கீதல் என்று கொடுத்து விடாதே. இரண்டும் என் கண்மணிகள். அவர்களுக்கிடையில் ஒரு பூசலும் இல்லாமல் ராமர் லட்சுமணன் போல் அன்பாய் இருக்க வேண்டும். அவர்கள் இருவரின் நட்புத்தான் ஐயா என்னுயிரை நீடித்து வைத்திருக்கும்.

0 0 0

இருவரும் அழகிகள். மூத்த பெண் பழமையை விரும்பியவள். அடக்கமானவள். இளேயவள்.........! இரு பெண்களின் தன்மையை சோபாவிலிருந்து கொண்டே அறிந்து விட்டார் சோமசுந்தரம்.

"என்னப்பா கதைக்காமல் இருக்கிறீர்கள் எங்களோட கோபமா?" இரு பெண்களின் குரலும் ஒரே நேரத்தில் ஒலித்தது.

"எனக்கு உங்கள் மேல் என்ன கோபம். போன விடுமுறைக்குக் கண்ட உங்களுக்கும் இந்த விடுமுறைக்கு காண்ற உங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டு வாயடைச்சுப் போச்சுதம்மா. என்ன மாலு நல்லாய் மெலிந்து போனுய்...!"

"கொஸ்டல் சாப்பாடு ஊதவா வைக்கும்?" மாலுவின் பதில். 'வந்த களேப்பாயிருக்கும் போய் தூங்குங்கோ இல்லாவிட்டால் முகம் கை காலேக் கழுவி விட்டுச் சாப்பிடுங்கோ. பின்னேரம் சாவகாசமாய்க் கதைப்போம். எப்படித் தம்பி அப்பா அம்மாவின் சுகங்கள்?"

"நல்லாத்தான் இருக்கினம் அவையள் மாமா."

"ஏன்டி கலா! நாலு மணியாச்சு கோப்பியைக் குடித்து விட்டு. இந்தா இந்தக் கோப்பியைக் கொண்டுபோய் அத்தானிடம் கொடேன்"!

"என்னம்மா பெரிய கரைச்சலாய் இருக்கு அவ எங்கையாம். அவ எங்கையாவது மூலேக்குள் இருந்து கதைப்பா. அவவைக் கூப்பிட்டுக் கொடுத்து விடுங்களேன். வெறுப்புடன் பதிலளித்த மகளே அதிர்ச்சியடைந்த விழியுடன் நோக்கிய அகிலாவின் வாய் மௌனியானது.

"கலா, நீயாம்மா!...... இப்படிப் பேசுகிருய்? அவளுக்கு

ஒன்றென்றல் எவ்வளவு துடி துடிப்பாய். அவளின்ர காலில் முள்ளுக் குத்தினல் உன்ர காலில் முள்ளுக் குத்தின மாதிரி அழுவியே. இவ்வளவு காலமாய் நீ அவளைப் பற்றி ஒரு நாளாவது எரிஞ்சு கதைத்திருப்பியா? கலா அடியோடு நீ மாறி விட்டாய்! உன் போக்கைப்பார்க்க எனக்குப் பயமாயிருக்கு கலா!...''

''அம்மோவ்!... தவருப் பேசியிருந்தா மன்னி. இப்ப நான் என்ன சொல்லி விட்டேன். ஏன் கலங்கிறீங்கள் எங்கேயிருக்குக் கோப்பி? தாங்கோ!... கொண்டு போய் கொடுக்கிறேன். அக்கா நீ இப்படியே இருந்தால் வீட்டு வேலைகளை யார் செய்வது. இந் தாங்க அத்தான் கோப்பி. அத் தார் வீட்டுக்குள் அடைஞ்சு கிடக்க உங்களுக்குப் போர் அடிக்கவில்லையா. வாங்க உலாவி விட்டு வரலாம்!''

''ஏன் கலா உன் அக்காளை யும் கூப்பிடேன்!'' என்ருன் அவன்.

இருவரின் நடத்தையும் மா லாவுக்கு நாடகம் போலிருந்தது. அவளின் காதல் நெஞ்சத்தில் அழலாக எரிந்தது.

''அத்தான் ஏன் உங்களுக்கு இந்த நாடகம். கலாவோட கும் மாளம் அடிப்பதும் என்னேடு காதல் வார்த்தை பேசுவதும் ச்சே.. நீங்கள் இப்படி இருப் பீர்கள் என்று கனவிலும் நினைக்க வில்லை.'' — என்றுசீறினுள் மாலா.

''மாலா எலும்பில்லா நாக்கு கண்டபடி பேசாதே!'' என்ருள் அவள்.

''ஓ...ஓ நல்லாய்க் கதைப் பீங்க. நான் ஆசையோட கூப் பிட்டால் வரமாட்டார். அவள் மாத்திரம் வாங்கோ எண்டு கூப் பிட்டவுடன் விழுந்தடித்துக் கொண்டு போவீர்களே அது ஏனும்?''

''மாலா நீ என்னுடன் பழகி யும் என்னைப் புரிந்து கொள்ள வில்லையே!... அதை நினைக்கும் போதுதான் துக்கமாய் இருக்கி றது. மாலா உன்னையே எடுத் துப்பார். உன்னைக் கலா படத் துக்குக்கூப்பிடும் போது அதை நீ உரிமையோடு மறுக்கலாம். ஆனல் அதே வேளையில் உனது சிநேகிதி வந்து கூப்பிட்டால் அவள் மனதைப் புண்படுத்த விரும்புவியா. சொல்...மாலா! அது போல்தான் நானும்'' அவன் பேச்சை முடிக்கவில்லை.

ஆனல் அவர்கள் பேச்சுக் கலாவுக்கு தன்னை அவமானப் படுத்துவது போலிருந்தது.

''மாலா உனக்குப் பெரிய எண்ணம் தான் ஏதோ வீட்டில இருக்க போர் அடிக்குது என்று அவரைக் கூப்பிட்டால் ஏதேதோ கதையெல்லாம் பேசுகிறியே. அவரைக் கல்யாணம் முடித்துக் வெளிநாட்டுக்குப் போய்விட லாம் என்று இன்பக் கனவுகண்டு இருந்தாயாக்கும். அதை நான் பாழாக்கிப் போட்டு விட்டேன் என்று நினைப்பாக்கும் பெரிய மன்மதன் அவர். அவற்ற அழ கில மயங்கிப் போட்டன் என்று நினைத்தாயாக்கும். உன்னைப் போல ஒரு சகோதரியைக் கதை யிலும் கூடக் காணவில்லை'' — என்று பொரிந்து கொட்டினுள்.

''கலா உன்னைப் பற்றி எனக் குத் தெரியுமடி. நானும் அவரும் கதைத்துக் கொண்டு இருக்கேக்க

நீ எவ்வளவு ...ரம் சுற்றிக் கொண்டு திரி...ய். நான் கதைப்பது உனக்... பொறுக்காது போல அம்ம... கூப்பிடுரு என்று எத்தனை ந...ள் பொய்சொல்லி என்னை வெ...யில அனுப்பியிருப்பாய்!''

''போது... நிறுத்துமாலா!... அவர் உனக்..மட்டும் அத்தானில்ல' எனக்..ம் அத்தான்தான் அந்த உறவோட பழகினனுனே தவிர... உன்னைப்போல... !''– கலா ஆத்திரத்தில் வாய்க்கு வந்தபடி பேசினுள்.

வீட்டில் ஒரே இரைச்சலாக இருந்தது.

கூடத்திலிருந்த சோமசுந்தரத்திற்கு உடலெல்லாம் தீயாகி தகித்தது ஊருக்கெல்லாம் சமாதானத்தையும், அமைதியையும் போதிக்கும் என் வீட்டில் பூகம்பமா?...

''கலா!... என்ன உது சத்தம்... பெரியவை சின்னவை எண்ட வித்தியாசமில்லாமல்!...''

''அப்பா ஊருக்கு உபதேசம் செய்யுங்கோ இல்லாட்டி உங்கட பெரிய மகளுக்குச் செய்யுங்கோ...எனக்கொண்டும் வேண்டாம்...''– கலா அவர் பேச்சை எடுத்தெறிந்து பேசினுள்,

ஏன் இந்த ஆத்திரம்? விரக்தி, ஒருவேளை தன்னையறியாமலே அவனைக் கலா தலிக்கிருளோ? –அவள் நெஞ்சம் திடுக்கிட்டாலும் ஒன்றுமே புரியவில்லை.

''முருகா நான் அபாக்கியவான் என்னை நீ கைவிட்டுவிட்டுப் போய் விட்டாயா.''

''ஐயா!'

''யாரது குரலில் கனிவு, ''ஓ கருப்பையாவா?''

''ஆமா ஐயா உங்க முயற்சியால் அவரும் திரும்பி வந்துட்டார்!''

'எங்க மகன்?''

அவன் தங்கக் கம்பி ஐயா. உங்களால் புடம் போடப்பட்ட சுத்தத் தங்கமாயிருக்கிறுன் ஐயா. சோமசுந்தரத்தின் கண்களில் நீர் மல்கியது.

''கலா உன்னைவிட அறிவு, செல்வம், அழகுஎல்லாவற்றிலும் குறைந்த ஒரு ஆண் மகன். என் ரத்தத்தில் ஊறுத ஒரு பிற மகன் ச்சா. கேவலம் நீ ஒரு பெண், அதுவும் என் ரத்தத்தில் ஊறிய என் மகள் என் சொல்லைத் தூக்கியெறிந்து பேசினியே. ஆனல் அவன் என்சொல்லை, முருகா முருகா.''

''ஐயா!''

''ம்...!'' நினைவுகள் தடைபட்டன.


''என்னையா ஒரு மாதிரியிருக்கிறீர்கள்? உங்கள் தயவால் தான் என் குமருகளும் கரை சேருது ஐயா நீங்கள் எங்கள் தெய்வம்!''–கறுப்பாயியின் கண்களிலிருந்து உருண்டோடிய இரண்டு சொட்டுக் கண்ணீர் நீதியரசரின் புறங்கையில் தங்கியது.

''ஐயா என்ர மூத்த குமருக்கு வாற வெள்ளிக்கிழமை கல்யாணம். நீங்கள்தான் முன்னின்று நடத்த வேண்டும். அப்ப நான் வரட்டா ஐயா!''

''முருகா என்று அவர் வாய், ஒரு கணம் முணுமுணுத்தபோது, மனம் கலாவையும்,மாலாவையும் எண்ணிப் பெருமூச்சுவிட்டது–

★

## ஹி...... ஹி...... ஹி



வீட்டிற்கு நேரம் செல்ல வந்த கணவன், தனது மனைவி பால்காரனுடன் சல்லாபிப்பதைக் கண்டான்: "வெட்கக் கேடு... உனது நேரத்தை நமது வீட்டுக்காரனுடன் கழித்தாலும் ஆறுமாத வாடகையாவது மிஞ்சும்" என்றான் ஆத்திரத்துடன்.

— ராணி

0 0 0

நீதிபதி : கடந்த இருபது ஆண்டுகளாக உம்மை நான் இங்கு காணவில்லையே? ஏனெனில்...

வாதி : ஏனெனில், இருபது ஆண்டுகளாக உமக்கு எதுவித பதவி உயர்வும் கிடைக்கவில்லை.

— வி. கனகராஜா

0 0 0

நோயாளி : நாங்கள் உங்களை நல்லா விரும்புகிறம்... மற்றெல்லா டாக்டர்களையும் விட நல்லாப் பிடிச்சிருக்கு......

புது டாக்டர் : ஏன்...?

நோயாளி : நீங்களும் எங்களைப் போலவேஇருக்கிறியள்.

0 0 0



"என்னடா...... நீயேன் வந்தனீ? இனுமா...? பேப்பரிலே என்ன போட்டிருக்குத் தெரியுமே? லஞ்சம் கொடுக்கிறது சட்ட விரோதமாம்......"

—ராஜு

0 0 0

### ஆழமாக வெட்ட

"இம்மாதம் நீங்கள் பழுதாக்கிய ஏழாவது ஒப்பறேசன் ரேபிள் இது டொக்கர்! வெட்டும்போது ஆழமாக வெட்டாதீர்கள்"

# கருணையினால்ல.........

'அசலா'



நல்லூர் கோவில் மணி டாண்! டாண்! என்றுநாலு மணி என்பதை அறிவித்தது.

"அப்பனே! முருகா!" என்ற வண்ணம் சாக்குக் கட்டிலை சுவருடன் சாத்தி வைத்துவிட்டு "என்ன புழுக்கம் அப்பா இது-அதுகள் எப்படித்தான் நித்திரை கொள்ளுதுகளோ" என்று உட்புறம் பார்த்து முணு முணுத்துக் கொண்டு தன் கட்டுக் குடுமியைத் தட்டி முடிந்தார்.

"எடி பிள்ளை கனகம் எழும்பனடி" என்று குரல் கொடுத்துத் தன்மகளை எழுப்பினார். தான் எப்படிக் கழுதையாகக் கத்தினாலும் மனைவி வள்ளியம்மை இப்பொழுது எழும்பமாட்டாள் என்பது அவரது முப்பது வருட வாழ்க்கையின் அனுபவம்.

தந்தையின் குரலைக் கேட்ட மகள் "இந்த அப்புவோடை பெரிய கரைச்சல்"ன்று முணுமுணுத்தவண்ணம் எழுந்து பாயைச் சுருட்டினாள். மகள் எழுந்ததைக் கண்ட பிள்ளையவர்கள் மண்வெட்டியை தூக்கிக் கொண்டு தோட்டத்திற்குள் நுழைந்தார். அந்த நேரத்தில்

வீட்டில் இன்னொரு ஜீவனும் எழுந்ததை அவர் அறிந்தாலும் அதைச் சட்டை செய்யவில்லை.

தோட்டத்தில் நேற்று அடைத்த வாய்க்கால்களைத் திறந்துவிட்டு கிணற்றடியில் போய் தண்ணீர் இறைக்கத் தொடங்கினார். மகள் குசினிக்குள் நுழைந்து கேத்திலை கையில் எடுத்துக்கொண்டுதுலக்கி ஒழுங்காக அடுக்கிய பாத்திரங்களை பார்த்துவிட்டு, ''பாவம் அண்ணி!'' என்று முணுமுணுத்தாள்.

கிணற்றடியில் முகம் கழுவி' கேத்தலில் தண்ணீரைக்கொதிக்க வைத்துவிட்டு செம்பில் தண்ணீருடன் மாட்டுக்கொட்டிலுக்குப் போனாள். அதற்குள் அங்கு வந்திருந்த சிதம்பரம் பிள்ளை பாலைக் கறந்து நுரை பொங்க மகளிடம் நீட்டினார். கேத்தலை இறக்கிவிட்டு பாலை ஊற்றி வைத்த கனகம் அதனை உற்றுப் பார்த்தாள். பால் நுரையைப்போலவே அவள் உள்ளத்தில் எண்ணங்கள் பொங்கியது.

0 0 0

ஆஸ்திக்கொரு ஆணும், ஆசைக்கொரு பெண்ணும் என்பார்களே அதைப்போல சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மைத் தம்பதிகளின் கொழுந்துகள் சுந்தரமும், கனகமும். ஆஸ்தி அதிகம் இல்லாவிட்டாலும் அதற்கு ஒரு மகன் சுந்தரம் இருந்தான். அவனை தன்சுருட்டுச் தொழிலால் ஒருவாறு படிப்பித்து ஓவசியர் ஆக்கிவிட்டார். அதனாலேற்பட்ட களைப்போ அல்லது பழமையில் ஊறிய பழக்கமோ அவர் மகளை எஸ். எஸ். சியுடன் வீட்டில் நிறுத்திவிட்டார்.

மகன் உழைக்கத்தொடங்கியதும் சுருட்டைவிட்டு ஏதோ சொந்த வளவில் சிறு தோட்டம் போட்டுக்கொண்டு தெருநண்பர்களுடன் அரட்டை அடிப்பதில் காலத்தைச் செலவழித்தார்.

இந்த நேரத்தில்தான் அவரது நண்பர் வாயாடி வேலுப்பிள்ளை ஒரு தரகைக் கொண்டு வந்தார்.

''எடா சிதம்பரம்! இஞ்சை எங்கடை கந்தையரின்ரை பேத்திப் பெட்டை ரதியாட்டம் ஒரு நாற்பது ஐம்பது ரூபாயுடன் நிற்குது. எங்கடை சுந்தரத்திற்கு நல்ல பொருத்தமடா! தாய்தகப்பன் என்ற பிக்கல், பிடுங்கல் இல்லை. தனிப்பெட்டை நீ என்ன சொல்லுகின்றாய்?''

அந்த நாற்பது ஐம்பது ரூபாய் நல்லா வேலைசெய்தது. அது அவரது மகனிற்கும் வேலை செய்தது. அதன் பின் செல்வி பூமா திருமதி சுந்தரமானாள்.

சீதனத்தில்மயங்காது அவளை ஏற்றுக்கொண்டது மாமியும், மைத்துனியும்தான்.

தனிக்குடித்தனம் ஆரம்பித்து ஏழோ எட்டு மாதத்தின் பின் வெறுங்கையால் தங்களை அவள் அண்டியபின்புதான்

---

மகனின் கடிதத்தை தந்தை படிக்கிறார். -அன்பே .. உன்னைக் காணாமல் என்னால் இருக்க முடியவில்லையே...'

''பாவிப்பயல்... கடிதத்தை மாற்றி அனுப்பிவிட்டான்போலிருக்கு ..''

—ரவிகரன். கி.

---

பிள்ளையவர்களுக்கு தன் மகன் மயங்கியது அவள் சீதனத்தில் தான் என்பது தெரிந்தது. ஆனால் என்ன பலன் அவன்தான் தன்னுடன் வேலைசெய்த ஒருவளை மணந்துவிட்டானே! விவகாரத்து ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடக் கட்ட போது" நான் நான் இறக்கும்வரை இப்படித் தான் இருக்க விரும்புகின்றேன். ஆனால் நீங்கள் யாரையாவது மணந்து சந்தோஷத்துடன் இருங்கள் அதுவே எனக்குப் போதும்" என்று மறுத்துவிட்டாள்.

அதாவது அக் கல் நெஞ்சனை இளகச் செய்யவில்லை.

''சுரீர்" என்ற பால் வழிந்த சத்தமும், ''எங்கை மோனை தேத்தண்ணி!" என்ற வண்ணம் வந்த தந்தையின் குரலும் கனகத்தை இவ் உலகிற்கு இழுத்து வந்தன. தேநீரைத் தந்தைக்குக் கொடுத்துவிட்டு அண்ணிக்கும், தாய்க்கும் எடுத்து வைத்தாள். அப்போது அங்கு வந்த தாய்க்கும் எடுத்துக் கொடுத்துவிட்டு பூமாவிற்கு எடுத்துக் கொண்டு நிமிர்ந்தவள் கையில் பிரசாதத்துடன் வந்த அண்ணியைப்பார்த்து முறுவலித்தாள். நெற்றியில் நீறு துலங்க மாமிக்கும், மைத்துனிக்கும் பிரசாதத்தை நீட்டினாள்.

''என்ன மாமி! நீங்களேன் குசினிக்குள் வந்தனீங்கள். நாங்களெல்லாம் ஏனிருக்கின்றோம்'' என்று மாமியாரை அனுப்பிவிட்டு கனகத்துடன் வேளையாகவே பிள்ளையவர்களுக்குச் சமையலில் ஈடுபட்டாள்.

கணவனால் புறக்கணிக்கப்பட்டபின் நீல மயிலேறும் கோல மணவாளனையே சரணடைந்து



நோயாளி : பல்லைப் பிடுங்க எவ்வளவு சார்ஜ், டொக்டர்?

டொக்டர் : ஐம்பது ரூபா...

நோயாளி : ஒரு நிமிசத்தில் ஒரு பல் பிடுங்க இவ்வளவு சார்ஜா?

டொக்டர் : நான் மெதுவாகத் தான் பிடுங்குவன்.

---

விரக்தியில் வாழ்ந்து வந்தாள். அவள் ஒட்டிப் பழகுவது கூடக் கனகத்துடன்தான். அவளுக்குத் தன் அண்ணி என்றால் கொள்ளை விருப்பம். மாமிக்கும் மருமகளில் விருப்பம். மாமாவிற்கு அனுதாபம் தானென்றால் மகன் அனுப்பும் ஐம்பது ரூபா அவரது நாக்கைக் கட்டிப் போட்டுவிட்டது. எங்காவது பூமாதென்பட்டால் சிறிது புன்முறுவலுடன் சரி.

0 0 0

திண்ணையில் வாயாடி வேலுப்பிள்ளையும், வம்பர் சிதம்பரப்பிள்ளையும் வீற்றிருந்தனர். மணி எட்டு இருக்கும். மனைவி பிரத்தியேகமாகத் தயாரித்தளித்த எலுமிச்சம் நீரை அருந்திவிட்டு வம்பர் வாயாடியுடன் வெற்றிலைத் துவையலை மென்று கொண்டிருந்தார்.

வீதி விஷயங்களை ஆராய்ந்து விட்டுப் பிள்ளையவர்களின் வீட்டு விஷயத்திற்குத் தாவினர். ''என்னடா உந்தப் பெட்டையை என்ன செய்யப் போகின்றாய்?''

''அதுதானடா எனக்கும் தெரியேல்லை பெட்டை குதிராட்டம்வளர்ந்துநிற்கின்றாள். உந்தத் துலைவானும் இப்ப இரண்டு மாசமாய் காசும் அனுப்பேல்லை ஏனோ தெரியவில்லை. உனக்குத் தெரியுமோ? அவன் இப்ப பெரிய இடைஞ்சல் படுகின்றானாம். குடும்பம் பெரிய கஷ்டப்படுகுதாமே?'' என்றார் வாயாடி. ''என்ன அநியாயம்'' என்றலுத்துக் கொண்டார் பிள்ளை. நேரமாகிவிட்டபடியால் வீட்டுக்குப் போகப் புறப்பட்டார் வேலுப்பிள்ளை.

அப்போது, ''எணை இஞ்ச ஓடியாணை'' என்ற மனைவியின் அலறலும், அதனைத் தொடர்ந்து கேட்ட, மகளின் அலறலைக் கேட்டுப் பிள்ளையும், நண்பரும் உள்ளுக்குள் ஓடினர். அங்கு பார்க்க நடுங்கும் இரத்த வெள்ளத்தில் கிடந்தாள் பூமா. பக்கத்தில் ஒரு அரிவாள் இரத்தத்துடன் கிடந்தது.

''அண்ணி! அண்ணி?'' என்று கனகம் கத்தியபடி அவள் தலையை மடியில் வைத்துக் கொண்டாள்.

''பரணில் கிடந்த வெண்கலப் பானையை எடுக்க ஏறினாள் அங்கை கிடந்த அரிவாள் உச்சியில் விழுந்து விட்டுதணை என்று அழுதாள் வள்ளியம்மை. எதற்கும் அஞ்சாத பிள்ளையவர்களும், வாடிய வாழைத்தண்டு போலக் கிடந்த மருமகளைப் பார்த்துக் கண்ணீர் விட்டார்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள். வெளியில் பதைக்கும் நெஞ்சுடன் வாயாடி வேலுப்பிள்ளை சிதம்பபரம், கனகம். வள்ளியம்மை காத்திருந்தனர் உள்ளே கசமுச வென்று பேச்சும் அதனைத் தொடர்ந்து வெளிவந்த டாக்டர்.

''உங்கள் கேசுக்கு இரத்தம் தேவையாகவுள்ளது துரதிஷ்டவசமாக இங்கு இரத்தவங்கி காலியாகவுள்ளது. உங்களில் யாராவது இரத்தம் தந்தால் சரி அல்லது...! மேலே முடிக்காது வானத்தை நோக்கினார்.

''ஐயோ அண்ணி'' என்று வாய் விட்டலறியே விட்டாள் கனகம். நால்வரும் இரத்தம் கொடுக்க வந்தனர் ஆனால் என்ன துரதிர்ஷ்டம் ஒன்றும் பொருந்வில்லை. என்ன செய்வதென்று விக்கித்து நின்ற வேளையிலே!

''சுந்தரம்!'' என்று கனகத்தின் குரல் கேட்டு மற்ற மூவரும் திரும்பினர்.

ரயில்ல் வந்த களைப்புடன் கசங்கிய உடையுடன் நின்ற சுந்தரம் இப்போதுதான் வந்ததாகவும் அயலவரிடம் விஷயத்

தை அறிந்து வந்ததாகவும் கூறினான். மனைவி ஆபத்தான நிலையிலிருப்பதைப் பொருட்படுத்தாது தனக்கு வேலை போய் விட்டதாகவும், பணக் கஷ்டமாக இருப்பதால் தந்தையிடம் சிறிது பணம் வாங்கலாமென்று வந்ததாகவும் கூறினான் மனைவியைப் பொருட்படுத்தாது பணத்தில் குறியாய் நிற்கும் அவனை அனைவரும் திட்டினர்.

அப்போது அங்கு வந்த டாக்டர் "நீங்கள் இரத்தம் கொடுக்க முடியுமா?" என்று விஷயம அறிந்தவராகக் கேட்டார்.

"எஸ் டாக்டர் ஐ கான் கிவ் (yes Dr I can give) 50 ரூபாய்" என்று வியாபார பாஷையில் பேசினான்.

"அடப்பாவி சொந்த மனைவிக்கே காசு கேட்கின்றானே" இந்த நிலையில்காசுகேட்கின்றானே என்று அனைவரும் கலங்கினர். ஆனால் விஜயம் அறிந்த டாக்டர் அவனது இரத்தம் பொருந்துவதாகவுள்ளதால் தானே காசு கொடுத்து இரத்தம் எடுத்து பூமாவிற்கு ஏற்றினர். காசை வாங்கிக் கொண்டு தான் நண்பனை பார்த்துவிட்டு வருவதாக வெளியேறும் சுந்தரத்தை அனைவரும் வெறித்துப் பார்த்தனர்.

"அடப்பாவி என்ன! கல் நெஞ்சம் இவனுக்கு!"

சிலையாக விருந்தவர்களை பூமாவின் முனுகல் உள்ளே அழைத்தது. மருமகனின் நிலையை உணராது வள்ளியம்மை ஆரம்பத்தில் அனைத்தையும் கூறிவிட்டாள். அனைவரும் தன்னையே முறைப்பதைக் கண்டபின்புதான் தவறுவிளங்கியது.

---

கணவன் சொன்னான்: கண்ணே! இன்று காலையில் முகசவரம் செய்ததும், பதினைந்து வருஷம் இளமையானது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அதற்கு மனைவி சொன்னாள், 'அப்படியானால் ஏன் நீங்கள் இரவிலும் முகசவரம் செய்யக் கூடாது. முப்பது வருஷம் இளமையானது போன்ற உணர்ச்சி ஏற்படுமே!"

---

ஆனால் பூமா அதைக்கேட்டு, வேதனையுடன் புன்முறுவல் பூத்தாள்.

பின்மெலிந்த குரலில்

"கடவுளின் விளையாட்டைப் பார்த்தீர்களா? ஒருவரது இரத்தமும் பொருந்தாதிருக்க அவரது இரத்தம் எனக்குப் பொருந்தியது ஈசனின் கருணைதான். அவர் தனது இரத்தத்தை யாரோ ஒருவருக்குஎன்பதுபோல காசுக்கு அளித்தாலும் அவரது இரத்தம் எனது உடலில் ஓடுகின்றது. அது ஒன்றே காணும். அவர் எனக்கு இரத்தமளித்தது. கருணையினாலல்ல! கடமையினாலுமல்ல! காசிற்காக! அதற்காக நான் வருத்தப்படவில்லை. எல்லாம் அந்த முருகனின் செயல்" என்று கூறிவிட்டு, "ஏதோ கடவுளருளால் நான் பிழைத்து விட்டேன் ஏதோ காலம் வரும்வரை நான் என்கடமையைச் செய்ய வேண்டியதுதான்"

என்று கூறியவண்ணம் ஆயாசத்துடனும், பெருமையுடனும், நிறைவுடனும் கண்ணைமூடினாள். அயர்வுடன் துயின்றாள்.

அவள் பெண்.

★

# ஒலிவர் டுவிஸ்ட்

ஏ. ரி. பொன்னுத்துரை. B.A.



''இல்லை இல்லை. அது என்னுடையது. அந்தப் புத்தகங்களை நீயெடுத்துக்கொள்'' இது அந்த யூதக் கிழவனின் பதில்.

''அந்த நோட்டு எனக்குரியதல்ல வெனின் ஒலிவரை திருப்ப கொண்டு சென்றுவிடுவேன்'' இது சைக்கின் கோஷம். கோபாவேஷமாக பேசிய சைக் அந்த யூதக் கிழவனின் கை விரல்களுக்கிடையே இருந்த அந்த நோட்டை இழுத்து எடுத்துக் கொள்கிருன். விரும்பினுல் அந்தப் புத்தகங்களை வைத்திருக்குப்படி அந்த யூதனுக்கு கூறுகிருன் சைக்.

''ஐயா! அந்தப் புத்தகங்கள் அந்தக் கனவானுக்குரியவை. சுரத்தினுல் இறக்கும் தறுவாயில் தவித்த என்னை பேணிக்காத்த அந்த பெரிய கனவானுக்குரியவை அந்த புத்தகங்கள். தயவு செய்து அவரிடமே அந்த புத்தகங்களையும் பணத்தையும் திரும்ப அனுப்பிவிடுங்கள். இல்லையெனில் நான்தான் திருடினேன் என்று அவரும் அந்த பெண்ணும் எண்ணி விடுவார்கள். தயவுசெய்து என்மீது கருணை காட்டுங்கள். அவைகளை தயவு கூர்ந்து அனுப்பிவிடுங்கள்''

யூதக்கிழவன் முன் மண்டியிட்டு வீழ்ந்து மன்றுடுகிருன ஒலிவர்.

அப்படி அவர்கள் நினைத்தால்தான் எமக்கு வெற்றி என்ற ஓசையில் யூதக் கிழவனும் சைக்கும் எக்காளமிடுகின்றனர். அந்தவேளை ஆதுதிரம் பீறிட அந்த அறையை விட்டு ''உதவி உதவி'' எனப் பேரிரைச்சல் போட்டவண்ணம் ஓடுகிருன ஒலிவர். யூதக் கிழவனும் வேறு இருவரும் ஒலிவரைப் பின் தொட

ரும் போது, நான்சி என்ற நங்கை சைக்கைப் பார்த்து. அந்த நாயை விட்டு விட வேண்டாம் என்றும், விட்டால் அது ஒலிவரை அங்கம் அங்கமாக கிழித்துவிடும் என்றும் கெஞ்சுகிறாள்.

''அவனுக்கு தக்கபாடம் படிப்பிக்கிறேன். என்னை விட்டு விலகு. இல்லையேல் உனது மண்டையை அந்த சுவரில் பிளப்பேன்'' கர்ச்சிக்கிறான் சைக். ஒலிவரை இழுத்துக்கொண்டு யூதனும் மற்றும் இருவரும் அறையில் புகும்போது சைக் நான்சியை அறையின் அடுத்த அந்தத்துக்கு போகுமளவுக்கு தள்ளுகிறான்.

''தம்பி! இந்த இடத்தில் இருந்தும் ஓடப்போகிறாயா? அப்படித்தானே'' என்று கூறிய வண்ணம் ஒரு மூலையில் கிடந்த பாரமான தடியை தூக்குகிறான் யூதன். பதில் பேசாத ஒலிவர் பெருமூச்சு விடுகிறான். ஒலிவரின் முதுகில் பலமாக ஒரு தரம் அடித்து விட்டு, மறுமுறையும் தாக்குவதற்காக ஓங்கும் போது அந்தப் பெண் முண்டியடித்து செல்கிறாள்; தடியைப் பறிக்கிறாள்; வேகமாக அடுப்புக்குள் எறிகிறாள்.

''என் கண்களால் இதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நீதானே திரும்ப அவனைப் பிடித்து விட்டாய். வேறு என்ன உனக்கு வேண்டும். அவனை விட்டு விடு. தனிய விட்டு விடு. இல்லாவிட்டால் நான் உன்னை கட்டாயம் கொல்வேன்.''

கோபக்கனல் தெறிக்க சீறுகிறாள்.

''நீ பேசுவதன் அர்த்தமென்ன? நீ யார் என்பது உனக்கு தெரியுமா? சைக் வினவுகிறான்.

''ஆமாம். எனக்கெல்லாம் தெரியும்.'' அந்த பெண் பதில் கூறினாள்.

''அப்படியானால் அமைதியை நிலைநாட்டு. இல்லையெனில் நான் உன்னை அடக்குவேன். பையன்களை சிநேகிப்பதில் நீ வல்லவள். நீ நல்லவள்''

''கடவுளே! நீதான் காப்பாற்ற வேண்டும்.'' உணர்ச்சி பீறிட பேசினாள். ஒலிவரை தாக்கக்கூடாது என அடம்பிடித்து நின்றாள். வாதாடினாள். தனது பன்னிரண்டு அவல வாழ்க்கைக்கு அந்த யூதன்தான் காரணமென அவனை ஏசினாள்; பேசினாள். தலைமயிர் குழம்பிச் சுழல, உடைகள் கிழிய உணர்ச்சி மேலிட அந்த யூதக் கிழவனைப் பழிக்குப் பழி வாங்க பாய்ந்தாள். சைக் தடுத்திருக்காவிட்டால் அவள் நினைத்ததை செய்திருப்பாள். சைக்கின் பிடியில் இருந்தும் விடுபடாது திணறி மயங்கி வீழ்ந்தாள்.

## 8

அடுத்த நாள் மத்தியான வேளை; ஒருவரும் இல்லாத நேரம்; அந்த யூதக் கிழவன் ஒலிவரைச் சந்திக்கிறான். பசிக் கொடூரத்தால் உயிர் ஊசலாடிய வேளை, உண்டி கொடுத்து உறைவிடம் உதவி காப்பாற்றிய தன்னையும், தனது சகாக்களையும், விட்டு விட்டு ஓட எத்தனித்த நன்றி கெட்ட செய்கை பற்றி ஒலிவருக்கு ஒரு நீண்ட பிரசங்கம் செய்கிறான். தமக்குத் துரோகமிழைத்து தம்மைப் பற்றிப் பொலிசுக்குப் புகார் செய்ய எத்தனித்த ஒரு பையனை எவ்

வண்ணம் முன்னர் தூக்கிலிடச் செய்தோம் என்பது பற்றியும் ஒலிவருக்கு சுட்டிக் காட்டுகிறான் தனது நீண்ட பேச்சில் அந்த யூதனின் பயங்கரப் பேச்சு ஒலிவருக்கு பெரும் அவல உணர்வையூட்டுகிறது. அருவருப்பான முறையில் சிரித்து சிரித்து, ஒலிவரைத் தட்டிக் கொடுத்தபடி, தான் சொல்வதைத் தட்டாது, அமைதியாக ஒத்தாசையாகச் செய்வானானால் தாம் ஆப்த நண்பர்கள் போல் வாழலாம் என்று கூறிவிட்டு அறைக் கதவை மூடியபடி, வெளியே செல்கிறான் அந்த யூதன். நாட்கள் ஓடி மறைகின்றன. செட்சி (chertsey) என்னும் இடத்தில் உள்ள வீட்டில் களவாடுவதற்குத் திட்டம் தீட்டுகிறார்கள் யூதனின் ஆட்கள். பாவம்! அதில் ஒலிவரும் பங்கு கொள்ள வேண்டியிருக்கிறதே!

சைக்கின் வீட்டிற்கு ஒலிவர் அழைத்துச் செல்லப்பட்டான். சைக் ஒரு கொடியவனாதலால் இரும்பு இதயத்தினன் ஆதலால் அவன் இடும் கட்டளை எதுவாயினும் அப்படியே செய்யத் தயங்காதே என்ற புத்திமதியை ஒலிவருக்கு கூறுகிறான் யூதன். அங்கே நான்சி என்ற நங்கை இருந்தது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. அவளே ஒலிவரை சைக்கிடம் அழைத்துச் செல்கிறாள். காற்றின் வேகத்தையும், மழையின் கோரத்தையும் பொருட்படுத்தாது, சைக்கும் ஒலிவரும் தெருவிலே கால்வைக்கிறார்கள். ஒலிவரை இறுக்கமாக பற்றியபடி, சைக் பட்டணத்து வீதிகளைத் தாண்டி, நாட்டுப்புற தெருக்களுக்கும் வந்து விட்டான். மிக ஒடுங்கிய ஒழுங்கைகளையும், சேறும் சகதியுமான வயல்களையும் தாண்டி, ஒரு பாழடைந்த வீட்டுக்கு வரும்போது, எங்கும் ஒரே இருள். அந்த வீடு வேறு யாருடையதும் அல்ல; வீடுகளை உடைத்து களவாடுவதையே கலையாகக்கொண்ட ரொபி கிறுக்கிற்றின் (Toby Crackit) வீடுதான் அது. எல்லோரும் அந்த வீட்டில் உள்ள சிறிய அறை ஒன்றுக்குள் நுழைகிறார்கள். "சைக்! நீ இங்கே வந்ததையிட்டு எனக்கு நல்ல சந்தோஷம். வராமல் விட்டு விடுவாயோ என்றுகூடப் பயந்தேன்." இப்படிப் பேசிய கிறுக்கிற் தனது கண்களை ஒலிவர் மேல் பாய்ச்சியபடி "அந்தப் பையன் யார்?" என்ற வினாவை எழுப்புகிறான். "அவன் நமது பையன் தான்" என்றபதிலுடன் சாப்பாடு கேட்கிறான் சைக். உண்ண உணவும் குடிக்க குடிவகையும் மேசையில் இடம் பெறுகின்றன. கிளாசில் ஊற்றி போதையூட்டும் பானத்தை இருவரும் சுவைக்கின்றனர்.

இரவு நேரம். இரண்டு மணிக்கு இன்னும் அரை மணித்தியாலங்கள் தான் உள. இருவரும் தமது கழுத்தையும் தாடையையும் கரிய துவாயினால் சுற்றிக்கொள்கிறார்கள். தமது உருவத்தையே மறைக்கத்தக்க பெரிய கோற்றுக்குள் நுழைந்து கொள்கிறார்கள். கிறுக்கிற் ஒரு அலுமாரியைத் திறந்து இரண்டு பிஸ்ரல்களை எடுக்கிறான். அவற்றைத் தனது பொக்கற்றுக்குள் தள்ளுகிறான்.

"எல்லாம் சரிதானே. ஏதாவது மறந்தோமா?' கிருக்கிற் இப்படிக் கூறியபடி எல்லா ஆயத்தமும் செய்து முடிக்கிறுன். நடுவே ஒலிவரை பிடித்தபடி இரண்டு திருடர்களும் வெளியே புறப்படுகிருர்கள்.

எங்கும் மை இருள். பனிப் புகார் மிக உக்கிர மாக இருக்கும் வேளை. ஒரு பாலத்தைக் கடந்து செட்சி என்னும் சிறு பட்டணத்தை அடைகின்றனர். ஏகாந்தமாக காட்சியளித்த அப்பட்டணத்து பெரிய தெருவை ஒரே வேகத்தில் நடந்து முடித்தனர். பின் இடது பக்கம் திரும்பி கால் மைல் தூரம் நடந்து இறுதியில் ஒரு வீட்டின் முன்னே நின்றனர். அந்த வீடு மதிலால் சூழப்பட்டிருந்தது கணப் பொழுதில் மதிலின்மேல் ஏறி விட்டான் கிருக்கிற் என்பவன். சிறிது நேரத்தின் பின் சைக்கும் ஒலிவரும் மதிலைக் கடந்து உட்புறத்துக்குள் குதித்தனர்.

பயமும் துக்கமும் ஒலிவரைப் பைத்தியக்காரன் ஆக்கும் போல் இருந்தது. தாம் வந்தது கொலை செய்வதற்கு இல்லையெனில், வீட்டை உடைத்து களவாடவே என்ற எண்ணம் முதற் தடவையாக முக்குளிய வைத்தது. பனிப்புகார் அவன் கண்களை மறைத்தன; ஏதோ குளிர்ந்த வஸ்து அவன் முகத்தை மூடியது. அவனது அங்கங்கள் சோர்ந்தன. உடனே முழங்காலில் குந்தினுன்.

"உடனே எழும்பு, இல்லையெனில் உனது மூளை அந்த புல் தரையில் சுக்கு நூருக சிதறடிக்கப்படும் இந்த பிஸ்ரலால்" பிஸ்ரலை பொக்கற்றில் இருந்தும் எடுத்தபடி படபடப்பாக ஆத்திரத்துடன் கூறுகிறுன் சைக்.

"ஆ! கடவுள் பெயரால் கேட்கிறேன் என்னைப் போக விடுங்கள். என்னை ஓட விடுங்கள். எங்கேயாவது வயலில் விழுந்து மாண்டு மடிகிறேன். நான் லண்டன் பக்கம் வரவே மாட்டேன். கடவுளே! உன்னைப்பிரார்த்திக்கிறேன் என் மேல் கருணை காட்டு, களவாட என்னை விட்டு விடாதே" "இப்படியாக கதறுகிறுன் ஒலிவர்.

"உஸ் சப்தம், ஒரு வார்த்தை பேசினுய் அடுத்த கணம் உன் மண்டை வெடிக்கும்" ஒலிவரை அதட்டியபடி சைக்கிடம் அந்த கதவுத்தாள் உடைக்கப்பட வேண்டுமென்று கூறுகிறுன் கிருக்கிற்.

சிறிது நேரத்தின் பின் வீட்டின் பின்னே உள்ள யன்னல் கதவை திறந்தார்கள். அந்த யன்னல் நிலத்தில் இருந்து ஐந்தரை அடி உயரத்தில் இருந்தது. அந்த யன்னல் ஊடாக ஒலிவரின் பருமனளவான பையன் உள்ளே செல்லலாம்.

"நான் கூறுவதைக் கவனமாய் கேள். இந்த யன்னலுக்கூடாக உன்னை உள்ளே தள்ளப் போகிறேன். நான் தரும் விளக்குடன் மெல்லமெல்லமாககோலுக்குள் சென்று தெருவை நோக்கியிருக்கும் கதவண்டை செல். நாங்கள் அதன் மூலம் உள்ளிட வசதியாக அதை திறந்து விடு" ஒலிவரைப் பார்த்து இரகசியமாகப் பேசுகிறுன் சைக். எவ்வித அரவமும் இன்றி ஒலிவரை யன்னலுக்கூடாக உள்ளே தள்ளுகிருர்கள். பிணம் போலக் காட்சியளிக்கும் அந்த, கள்ளங் கபடமற்ற பையன் யாது செய்வான்!

(வளரும்)

# இன்பம்

"து. வதுறுதீன்"

திருடருக்கு இரவுதரும் திருட்டில் இன்பம்
தின்பண்டம் உண்பதிலே சிறுவர்க் கின்பம்
பொரிவிளங்காய் தின்பதிலே யானைக் கின்பம்
பொன்னிடத்தில் பூவையர்க்குப் புதிய இன்பம்
மருள்வாழ்வி லழல்வோர்க்கு மருட்சி இன்பம்
மன்பதைக்கு ஆசையிலே மயக்கம் இன்பம்
எரிகின்ற விளக்கொளியில் விட்டிற் கின்பம்
இரந்துண்ணும் இழிவாழ்வில் இரப்போர்க் கின்பம்

எத்தனுக்கு ஏமாளி இடத்தில் இன்பம்
ஏமாளிக் கறியாமை சொந்த இன்பம்
மத்திடுமத் தயிரினிலே பூனைக் கின்பம்.
மாற்றுரை வீழ்த்துவதில் கட்சிக் கின்பம்
சித்திரையின் பால்நிலவு கண்ணுக் கின்பம்
சீறுகின்ற அரவினுக்கு இசையி லின்பம்
பத்தினிபோல் நடிப்பதிலே பரத்தைக் கின்பம்
பசித்தோர்க்கு உணவுதனில் இன்பம் கொள்ளை.

கதிரவனால் கமலத்துக் கின்ப முண்டு
கார்முகிலால் மயிலுக்கும் இன்ப முண்டு
மதியுதயம் அல்லிமலர்க் கின்ப மூட்டும்
மழையமிழ்தால் உயிரினத்துக் கின்ப முண்டு
எதிரிகளை விமர்சனத்தால் வீழ்த்தல் இன்பம்
இளையபல இன்பத்துக் கிடமென் றாலும்
சதியற்ற நியதிகளே நிலையாம் இன்பம்
தவறுதெனில் அவ்வின்பம் தனித்தே நிற்கும்

மலர்ந்துள்ள பூவில்தேன் வண்டுக் கின்பம்
மாங்கனியின் சுவையினிலே குயிலுக் கின்பம்
சிலையதனின் எழில்நிறைவில் சிற்பிக் கின்பம்
சிலந்திக்கோ ஈயிடத்தே நிறைந்த வின்பம்
உலகத்தே ஈதெல்லாம் சுயந லத்தின்
உருவாக மிளிர்கின்ற சொந்த இன்பம்
நிலையான இன்பத்தை தேட வேண்டின்
நித்தியமும் இறைவனிடம் நெஞ்சை வைப்பீர்






## காட்சி 6

[வெண்தாமரையென்ன மலரும் வைகறை. புத்த விகாரத்தின் உட்கூடத்தில் ஒளி மெல்லப் பரவுகின்றது. மத்தியில் பத்மாசன மிட்டு, அமைதியும் மோனமும் கமழ புத்தர் தவக்கோலத்திலாழ்ந் துள்ளார். அப்போது அவரின் பிரதம சீடரான ஆனந்தர் வந்து வணங்கி ஒரு புறமாக நிற்கிறார்.]

புத்தர் : (நிமிர்ந்து பார்த்து) ஆனந்தா!... என்ன விடயம்?

ஆனந்தர் : (பணிவுடன்) கருணைக் கடலே! தங்களைப் பார்க்க ஒரு அன்னை காத்துள்ளார்கள்!...

புத்தர் : என்ன!... அன்னையா?... என்னைப் பார்க்க வந்துள்ளார் களா?... அவர்களைக் காக்க வைத்துவிட்டா இங்கு வந்துள் ளாய்?... அழைத்துவா விரைந்து! தாய்க்குலமே வணக்கத் துக்குரியதல்லவா?...

ஆனந்தர் : பொறுத்தருள்க மாதவா! இதோ அழைத்து வருகிறேன்

[ஆனந்தர் சென்று ஒரு வயோதிக அன்னையுடன் திரும்பி வருகின்றார். சோகமே உருவாகி வருவது போல் வருகின்றாள். கௌதமரின் நெஞ்சம் பாகாய் உருகுகின்றது]

புத்தர் : (விரைவுக் குரலில்) வர வேண்டும்... வர வேண்டும்... இந்தக் கல்லாசனத்தில் அமருங்கள்... தாயே!...

[அவள் கல்லாசனத்தில் அமருமுன்பு பகவானை வணங்கு கின்றாள்.]

புத்தர் : (பதறி) என்ன காரியம் தாயே இது... வணக்கத்துக்குரிய தாங்களே என்னை வணங்குவதா?

அவள் : (அமைதியுடன்) புனிதரே!... உலகுக்கெல்லாம் ஒளி காட் டும் ஞான வள்ளலான தங்களை வணங்காமல் நாம் வேறு யாரை வணங்குவோம்? வாழ்க்கையின் நம்பிக்கையையும் யாரிடமிருந்து பெறுவோம்?

புத்தர் : (நிதானித்து) அப்படியா ?...... ஆமாம்... உலக வாழ்வில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு நம்பிக்கை வேண்டியதாகத்தானிருக்கிறது. குருவிடம் சீடனுக்கு, கணவனிடம் மனைவிக்கு மன்னனிடம் மக்களுக்கு...... உண்மையான...... உயர்ந்த வாக்கு அம்மா... தாங்கள் கூறியவை.

அவள் : அதே போல் ஒரு நம்பிக்கையை வைத்துத்தான் நானும் தங்களிடம் வந்துள்ளேன் ததாகதரே!......

புத்தர் ஆமாம். மன்னிக்க வேண்டும். தாங்கள் வந்த காரியத்தை நான் இன்னமும் அறியவில்லையே தாயே... இந்த வயோதிப காலத்தில் வழியெங்கும் கிடக்கும் கருங் கற்களையும், முட் கூட்டங்களையும் கடந்து, இந்தப் புலரிப் பொழுதிலே செங் கதிரோனும், புள்ளினக் கூட்டங்களும் முற்றாகக் கண் விழிக்காத போதில் தாங்கள் என்னைத் தேடி வந்த காரணம் ? அந்தளவிற்கு தங்களை வருத்தும் காரணத்தை நாங்கள் அறியலாமா ?

அவள் : அறக்கடவுளே!......... அபலையான எனக்குத் தாங்கள்தான் ஆதரவு காட்ட வேண்டும்.

புத்தர் : அம்மா நானோ துறவி. எதுவுமே இல்லாதவன். நான் தங் களுக்கு எத்தகைய உதவியைச் செய்ய முடியும் ?

அவள் : போதி மாதவா!...... நான் தங்களிடம் வேண்டும் உதவி பொன்னாலும், பொருளாலும் பெறக் கூடியதல்ல. அவற்றால் பெறக் கூடியதாக இருந்தால் என் வீட்டில் குவிந்திருக்கும் செல்வங்களைப் பயன்படுத்தியிருப்பேன். நான் வேண்டும் உதவி இவற்றாலெல்லாம் பெறக் கூடியதல்ல......... தங்கள் அன்பால்...... அருளால் மட்டுமே பெறக் கூடியது......?

புத்தர் : தாயே!...... தாங்கள் இந்த அருகனிடம் பெற விரும்பும் உதவிதான் என்ன ? விளங்கக் கூறுங்கள்!

அவள் : என் வயிற்றில் தாங்கள் பால் வார்க்க வேண்டும் பிரபு!... அதுதான் நான் வேண்டும் பேருதவி.

புத்தர் : தாயே தாங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசுவது இந்த எளிய துறவிக்கு புரியவில்லையம்மா ?

அவள் : மாதவா! தாங்கள் எல்லாம் அறிந்தவர்கள்......... நான் ஒரு அன்னை...... தாய்......

புத்தர் : அது புரிகிறதம்மா!... தங்கள் முகத்திலே கவியும் சோகத் திரையையெல்லாம் மீறி... தங்களின் தாய்மையொளி பிரகாசிப்பதை நான் காணுகிறேன் தாயே... இந்தத் தனயனிடம் ஒரு தாய்க்கு என்ன வேண்டுதல் அம்மா!......

அவள் : பிரபு!... என் மகனைக் காப்பாற்றுங்கள்!... உங்கள் ஒருவரால் தான் என் மகனைக் காப்பாற்ற முடியும்.

புத்தர் : உங்கள் மகனை நான் காப்பாற்றுவதா ? யாரவன் ? யாரிட மிருந்து அவனை நான் காப்பாற்றுவது ?...... விளக்கமாகக் கூறுங்கள் தாயே!...... தாங்கள் யார்......?

அவள் : (தயக்கத்துடன்) நான்... நான் தான் உலகமெல்லாம் பயந்து நடுங்கும் அங்குலிமாலனின் தாய்!......

புத்தர் : (திடுக்கிட்டு) என்ன!... நம்ப முடியவில்லையே என்னால்...... கொலையும் கொள்ளையும் நீசத்தனமான செயல்களைச் செய் யும் அந்தப் பயங்கர சமுதாய விரோதி எங்கே ? அன்பே உருவான தாங்கள் எங்கே ?... இது உண்மைதானா தாயே!...

அவள் : உண்மைதான் சுவாமி. தாழம் பூவிலும் நாகம் உறங்குவ தில்லையா ?......

புத்தர் : ஆனால் நாகம் வேறு. பூ வேறு தாயே...

அவள் : அதைப்போலத்தான் என் மைந்தனின் வாழ்வும் ஆகி விட்டது... அன்பும் அருளும் நிறைந்திருந்த அவனது மனப் பூவில் கொலைவெறியும், பழியுணர்ச்சியும் நாகமாகவந்து குடியேறிவிட்டது... இதிலிருந்து அவனைக் காப்பாற்ற உங்க ளால்தான் முடியும்... சுவாமி... உங்களால் தான் முடியும்.

புத்தர் : அதுசரி தாயே!... இதுகாறும் இல்லாத அக்கறை உங்கட்கு இன்று திடீரென ஏன் வந்தது...?

அவள் : சுவாமி... என்னைக் கேள்விமேல் கேள்விகேட்டு என்னை வதைக் காதீர்கள் (விம்முகிறாள்)...... என் மகனைக் கைப்பற்றிவர பிரசேனஜித்து மன்னர் தம்படையை அனுப்பியிருக்கிறார் இர்முறை அவன் கட்டாயம் கைப்பற்றப்படுவான்... அவ னுக்கு மரணம் நிச்சயம் என்று என் மனம் கூறிக்கொண்டே இருக்கிறது...சுவாமி... என் மகனைக் காப்பாற்றுங்கள்...

புத்தர் : அம்மா!... உன்மகனை எங்ஙனம் காப்பாற்றமுடியும்? அவனோ வழிப்போக்கர்களையும், யாத்திரிகர்களையும் கொன்றுகுவித்து அவர்கள் செல்வங்களைச் சூறையாடுவதுமட்டுமல்லாமல்... அவர்களின் கட்டை விரல்களையே மாலையாக்கி அணிந்து மகிழும் அங்குலிமாலனாக, வக்கிர புத்திக்காரனாகவல்லவா விளங்குகிறான்..அத்தகையவனை எங்ஙனம் காப்பாற்றமுடியும்? அவனை நான் அவனது பாவகிருத்தியங்களிலிருந்து காப்பாற்று வதா? அல்லது தண்டனையிலிருந்துகாப்பாற்றுவதா?...அவனை நான் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதால் நாட்டு மக்களின் கவலையற்ற வாழ்வுக்கு ப், உயிருக்கும்தீங்குசெய்தவனாவேன்...

அவனின் பாவ கிருத்தியங்களிலிருந்து அவனைக் காப்பது என்றாலும்... அவன் இதுவரை செய்த குற்றத்திற்கு தண்டனை அனுபவித்தே தீரவேண்டும்... ஏனெனில் அவன் ஒரு கொலைகாரன்... பயங்கரவாதி... சமுதாய விரோதி.

அவள்: போதும் சுவாமி போதும்!... மீண்டும் என் காதுபட அவனைக் கொலைகாரன் என்று பழிக்காதீர்கள். அவன் எப்படி இருந்தாலும் என் மகன்... என் மகன்... (விம்முகிறாள்)

புத்தர்: உண்மைதான் தாயே? ஆனால்... அவன் நாட்டின் மகனாக இல்லையே! விஷமாகவல்லவா இருக்கிறான்... ற்றத்திற்கேற்ற தண்டனையை அவன் அனுபவித்தே தீரவேண்டும்.

அவள்: (உறுதியான குரலில்) அப்படியானால்... என் மகன்... தன் தாயின் கண்களின் முன்னால் தூக்குக் கயிற்றில் ஊசலாட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்...

புத்தர்: நான் என்ன செய்வதம்மா... அவன் குற்றவாளி...

அவள்: (சிறிது சீற்றத்துடன்) என்மகனையே மீண்டும்மீண்டும் குற்றவாளி என்று கூறுகிறீர்களே... அவன் பிறப்பிலேயே குற்றவாளியாகவா பிறந்தான்? அல்லது வளர்ப்பிலே குற்றவாளியாகவா வளர்ந்தான்?... அவனை ஒரு பயங்கரவாதியாக்கியது யார்...? இந்தச் சமுதாயம்தானே... மன்னனின் ஆட்சிதானே!

புத்தர்: (திகைப்புடன்) என்னம்மா சொல்கிறீர்கள்?...

அவள்: ஆமாம் என்மகனைத் தண்டிப்பதென்றால், அவனைத் தண்டிப்பதன்முன் அவனை இந்நிலைக்காளாக்கிய நாட்டை, நாட்டு மக்களை. மன்னனை, மன்னனின் ஆட்சியை அல்லவா தண்டிக்க வேண்டும்? இதனை யார் செய்வது? யார் இதற்கு ஆணையிடுவது? பெற்ற வயிற்றில் அனல் ஏற்றி நிற்கும் எனக்குப் பதில் சொல்வது யார்? எல்லாம் அறிந்த தாங்களே ஊமையாகியபின் உண்மைக்கு விளக்கம் ஏது? உயிர்தான் ஏது?

புத்தர்: (சிந்தனையுடன்) ஆமாம் தாயே! தாங்கள் கூறிய அனைத்துமே உண்மைதான்... குற்றத்தைக் குற்றமாகக் காணுமுன்பு, குற்றத்தின் காரணத்தை ஆராய்வதுதான் உயர் பண்பு. உண்மையான நீதியும் கூட தாயே!... உங்கள் மைந்தன் இத்தகைய கொடிய செயல்களில் ஈடுபட என்னதான் காரணம்?...

அவள்: எல்லாம் அவன் மீது சமுதாயம் கொண்ட அழுக்காறுதான் காரணம்... இல்லாவிட்டால்... உலக உயிர்களை நேசிக்கக்

கற்றுக்கொண்ட அவன்...இத்தகைய விபரீத செயல்களிலீடு பட்டிருப்பானு?... அறக் கடவுளே கேளுங்கள்... என்மகனின் கதையைக் கேளுங்கள். என் வயிற்றில் பிறந்தான். ஊரே வியக்கும் அழகுடன் பிறந்த அவன் அழகுடனே வளர்ந்தான். அழகுடன் வீரமும், புத்திசாலித்தனமும் போட்டியிட்டுக் கொண்டே வளர்ந்தன. பெரியவனுனுன். உயர் கல்விக்காக அவனைக் குருகுலம் அனுப்பி வைத்தோம். அங்கும் அவன் புகழே ஓங்கியது. கல்வியிலே-முதல்வன். வீரப் போட்டிகளிலே முதல்வன். அழகிலே காமனை நிகர்த்தவன். அதனுல் குருவும், குருபத்தினியும் அவனை அன்புடன் நேசித்தனர் ஊரே அவனை வியந்தது. அதுவே அவனுக்கு வினையாகி விட்டது. சகமாணவர்களின் பொருமையைத் தூண்டிவிட்டது. அதுவே அவனுக்கு...(விம்முகிருள்)

புத்தர் : பின்பு என்ன நடந்தது தாயே!

அவள் : குருபத்தினியின் அன்பை பெற்றுவிட்ட அவனைக் கெடுக்க அவர்கள் செய்த சதி குரு பத்தினியின் கற்பிலும் மாசைப் பதித்து விட்டது சுவாமி... ஆமாம். சுவாமி... என் மகனுக்கும், தாய்போன்ற குருபத்தினிக்குமிடையே கூடா நட்பு உண்டு என்று அவர்கள் கிளப்பிவிட்ட கதை .. என் மகனின் ஆத்திரத்தைத் தூண்டிக் கொலைகாரனுக்கிவிட்டது. அது குருவின் சீற்றத்திற்கு நெய்வார்க்கவே, அவர் அவனைக் கடிந்து பேசவே... அவரும் உண்மையை உணராது பேசிய வார்த்தைகள் அவன் மனதைத் துண்டாட அவன் நாட்டை விட்டே விலகிப்போய்விட்டான் மாதவா... நாட்டைவிட்டே விலகிப்போய்விட்டான்...

புத்தர் : (சிந்தனையுடன்) உண்மைதான் அம்மா... மனித உள்ளத்தின் பொருமையெனும் நச்சுமரம் முளையிட்டு வளர, ஆசையெனும் எருவே காரணமாகின்றபோது, ஒன்றும் அறியா, பக்குவமடையா சிறு உள்ளங்கள் அதற்கு களமாகிவிடுகின்றன. ஏன்? முற்றுமுணர்ந்த முனிபுங்கவர்களே சில சமயம் ஆசை வலையிலாட்படும்போது இவர்கள் எம்மாத்திரம் ..

அவள் : அவர்கள் செய்த கொடுமை... என் மகனைக் கொலைகாரனுக்கிவிட்டது... மனித குலத்தையே மனதார நேசித்துவந்த என் மகன், மனித வாடையே வீசா கானகத்திலே யாருமற்ற அநாதையாக, மிருகங்களுடன் மிருகங்களாக வாழ யார் காரணம்?...இதற்கு காரணமானவர்களை அரசோ, ஆட்சியோ தண்டிக்கவில்லையே ஏன்?...ஏன்?

புத்தர் . (வானத்தை நோக்கி கைகளை உயர்த்தியவாறு) ஹே!...... மாதா...! இந்த மக்கள் தாம் தங்கள் அறியாமையால் எத்தகைய கொடிய பாதகங்களைப் புரிந்துவிடுகிருர்கள். அவர்களை மன்னித்துவிடு தாயே!...

அவள் : இப்போது சொல்லுங்கள் பகவானே!... என்மகன் குற்றவாளியா .. பல்கலையும் கற்று குருகுலமே வியக்க நின்ற என் மகன்... எறும்புக்கும் கூட தீங்கிழைக்காத மகன்... இவ்வளவு தீச்செயல்புரிகின்றான் என்றால்... அவனை இச்சமூகம் எந்தளவுக்கு வஞ்சித்திருக்கவேண்டும்... மோசம் செய்திருக்க வேண்டும்... இன்று அவனைக் கைப்பற்றிவர மன்னர் படை அனுப்பியிருக்கிறார். சமுதாயத்தால் தண்டிக்கப்படவென்றே தான் என் மகன் பிறந்திருக்கிறானா? சொல்லுங்கள் சுவாமி...?

புத்தர் : அம்மா!... உங்களால் உண்மைநிலை உணர்ந்தேன். உங்கள் மகன் குற்றவாளியில்லை. நிச்சயம் குற்றவாளியில்லை. ஆனால்... அவன் தான் செய்த தவறுகளுக்கு நிச்சயம் பிராயச்சித்தம் செய்தே தீருவான். புனிதமான தாய்மை உணர்வுகள் நிரம்பிய உங்களிடம் உதித்தவன் மாசற்றவனாகவே இருப்பான். ஆற்றல் பல மிக்க உன் மகனை குற்றவாளியாக்கித் தண்டிப்பதைவிட, அவனை நல்லவனாக்கி, மறுபடி அவனை இந்நிலத்திற்கு அழைத்து விட்டால்... நிச்சயம் நாட்டிற்கு நன்மையே கிட்டும்... தாயே! தாங்கள் கவலையில்லாமல் போய்வாருங்கள்... உங்கள் மகனை நிச்சயம் நான் காப்பாற்றுவேன்... ஒரு புனிதனாக நாட்டிற்கு அளிப்பேன்... இது உண்மை...

அவள் : அப்படியே... சுவாமி (வணங்கிப் போகிறாள்)

திரை.

## காட்சி 7

[இருண்ட கானகம். எங்கும் கரும்பாறைகளும், குன்றுகளும், புதர்களுமாக காட்சியளிக்கின்றன. அங்குலிமாலன் ஒரு பாறையிலமர்ந்து வெண் முயல் ஒன்றினைக் கையில் வைத்துத் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். அருகில் மான் குட்டிகள் துள்ளி விளையாடுகின்றன. மர அணில்கள் அவன் தோள்களில் ஓடி விளையாடுகின்றன. அவனின் தோற்றத்தை பல ஆண்டுகளாக வளர்ந்து, ஒழுங்காகக் கத்தரிக்கப்படாமலும், வாரப்படாமலுமிருந்த, தலையின், முகக் கேசங்கள் பயங்கரமாகக் காட்டுகின்றன.]

அங்குலிமாலன் : (முயல்குட்டியை தடவியவாறே) ஆஹா... என்ன வெண்மை. கள்ளங் கபடமற்ற பார்வை...... ம்ஹூம்...... உங்களைப் போய் விலங்கென்றார்களே...... இந்த மதி கெட்ட

வஞ்ச மானிடர்கள். உங்களின் உடல்களில் தூய்மை......... உள்ளத்தில் தூய்மை... மருளும் பார்வையிலும் தூய்மை... ஆனால் இந்த ஆறறிவு படைத்த மனிதருக்கோ... உடல்... உள்ளம்...... பார்வை எங்கும் கருமை... விஷம்... இவர்கள் வாழ்ந்தென்ன... இறந்தென்ன!...... இவர்கள் வாழ்வதினால் உலகம் அழுக்கு மயமாகிறது...... இவர்களைக் கொன்றழித்து உலகைத் தூய்மைப்படுத்துவேன்...... இதோ...... தொளாயிரத்து தொண்ணூற்று ஒன்பதின்மரை கொன்று அவர்களின் கட்டை விரல்களை மாலையாக்கி அணிந்திருக்கின்றேன்...... அதனால் அங்குலிமாலன் என்னும் பெயரையும் பெற்று விட்டேன்...... மாலை பூர்த்தியாக இன்னும் ஒன்றே ஒன்று...... ஒரேயொரு விரல் வேண்டும்... ஹும்...... ஒரே ஒரு விரல் வேண்டும்...

[திடீரென எழுகிறான். ஏதோ ஒரு ஒலியை தீர்க்கமாக அவதானிக்கிறான். 'டப... டப... பட... டப......' என்ற தப்பட்டை முழக்கங்களும், 'ஹோ!...' என்ற மனித இரைச்சலும் அவன் செவியில் விழுகின்றது. 'ஹும்!' - என்று உறுமியவாறு பின் ஓடிச்சென்று ஒரு பாறையின் மேலேறி இடுப்பில் இரு கைகளையும் வைத்தவாறு நின்று பார்க்கிறான்]

அங்குலிமாலன் : ஹா...... ஹா...... ஹா... படையா?... பேடிகள்... தனி ஒருவனைப் பிடிக்கப் பெரும் படை...... ஆற்றலற்ற பேடிகள்... அவர்களுக்கு ஒரு தப்பட்டை... சங்கம்... முழக்கம் ஆஹா...ஹா... பெரிய வீரர்கள்... சூராதி சூரர்கள்... நாட்டைக் காக்க... மக்களை நல்லவர்களாக வழி நடத்திச் செல்ல ஆற்றலற்ற ஒரு மன்னன்...அவனுக்கு ஒரு படை. தூ!

[ஓடிச்சென்று இன்னொரு பாறையில் நிற்கிறான்.]

ஓ!... வாட்படை வீரர்கள்... ஆள வழி தெரியா மன்னனுக்கு ஒரு வாட்படை... வாளால் ஆளத் தெரிந்த உங்கள் மன்னருக்கும் உங்களுக்கும் உள்ளத்தால் ஆளத் தெரியவில்லை...... அறிவிலிகளே... அழிந்து போகவா வருகிறீர்கள்...... வாருங்கள்... .. எனது வாளுக்கும் உணவளிக்க ஓடி வாருங்கள்...... விரைந்து வாருங்கள்!...

[ஓடிச்சென்று ஒரு மரத்திலேறிப் பார்க்கிறான்]

விற்படை வீரர்களா!... வில்லுடன் விரைந்து வாருங்கள்... சோற்படை காக்கத் தெரியா உங்களுக்கு ஒரு விற்படை!... என் வில்லும், அம்பறுத்தூணியும் நீண்ட நாட்களாகவே உறங்கிக் கிடக்கின்றன. வந்து அதன் உறக்கத்தைப் போக்கி அதற்கு உணவளிக்கப் பாய்ந்து வாருங்கள்!...

[இன்னொரு பாறைக்கு ஓடிச்செல்கிறான்.]

காலாட் படை வீரர்கள் வேறு!... காலனின் சந்நிதானத்திற்கு களப்பலியாக வரும் மந்தைக் கூட்டங்களே காற்றென விரைந்து வாருங்கள்...... காலதேவனின் கடும் பசியாற்றக் கடுகி வாருங்கள்... காவலனின் கடமையைக் காக்க கடுமென விரைந்து வாருங்கள்... ஹா... ஹா... ஹா...

[ஓடிச்சென்று, தன் வாள், அம்பு, அம்பறுத்தூணி இவற்றை எடுத்துக் கொண்டு ஓடுகின்றான். எங்கும் அவன் சிரிப்பொலி நிறைகின்றது.]

அங்குலி : (மீண்டும் தோன்றி) என் அங்குலிமாலையிலே ஒரேயொரு கட்டை விரல் குறைகின்றது என்று கவலைப்பட்டேன்...... ஆனால் நம் பிரசேனஜித்து மன்னரோ பரோபகாரி. கொடை வள்ளல்... ஒன்றிற்கு நூறாக... ஆயிரமாக... பத்தாயிரமாக அனுப்பியிருக்கிறார்...... ஹா... ஹா... ஹா... ஒரு பிடி அன்னத்திற்கு ஏங்கியவனுக்கு அறுசுவையுண்டியே படைக்கிறார்... அவர் வாழ்க...

[முன்னேக்கி ஓடி இன்னொரு பாறையில் ஏறி நின்று]

இதுவென்ன தயக்கம்... அன்ன நடை போடாது... விரைந்து வாருங்கள்... உங்கள் இரத்த வெள்ளத்திலே முழுக்காடி... என்னகத்து எரிமலையின் வெப்பக்கனலை அணைக்க வேண்டும்... அந்த அமைதியிலே நான் சாந்தி காணவேண்டும்... சிங்கக் குகை நாடிவரும் சிறு நரிகளே சிறு நடை போடாது பெரு நடையுடன் ஓடி வாருங்கள்... ஹா... ஹா... ஹா...

[அவனின் சிரிப்பொலி திடீரெனத் தடைப்படுகின்றது ஈனக்குரல் ஒன்று கேட்கின்றது. உற்றுக் கேட்கின்றான். 'மகனே!...மகனே!...' என்ற குரல் அவன் காதில் விழுகின்றது]

அங்குலி : (தயங்கி) யாரது?... இந்தக் கானகத்தில் தன் மகனைத் தேடி அலைவது?...... ஒரு பெண்ணின் குரல் போலல்லவா கேட்கின்றது? (சிந்தனையுடன்) ஓகோ யாரோ... தன் மைந்தன் என்னைத் தேடி வரும் படையிலிருக்கிறான் எனக் கேள்விப்பட்டு, அவனைச் சாவிலிருந்து தடுக்க ஓடி வருகிறார்கள் போலும்... ம்ஹூம்!... தாய்... தனயன்... குடும்பம் என்னை என் தாயிடமிருந்து பிரித்தெறிந்த இந்த மனிதர்களுக்கு மட்டும் தாய், தனயன், பாசம்... உலகம் முழுவதற்குமுள்ள உறவு... வாழ்க்கை முறை எனக்கு மட்டுமில்லை... என்னை வஞ்சித்த இந்த உலகை பழி வாங்கியே தீருவேன்...

[அப்போது பாறைப் புதர்கள் சலசலக்கின்றன.]

அங்குலி : (திடீரெனத் திரும்பி) யாரது?...

[புதர் மறைவிலிருந்து அவன் தாய் வெளி வருகிறாள்.

அவள் : மகனே!... மகனே!

அங்குலி : ம்... மகன்!.. மகனைத் தேடி இந்த கானகத்துக்கு வந்த நீ யார்?... நீ யாராக இருந்தாலும் எனக்கென்ன?... எனது இராஜ்ஜிய எல்லைக்குள் என் அனுமதியில்லாமல் நுழைந்த உன்னை என்ன செய்கிறேன் பார்!... (தன் கைவாளை ஓங்குகிறான்)

அவள் : மகனே!.. மகனே!... இதென்ன கோரம்... நான்தான் உன் தாயடா!... உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற பாவியடா என்னைப் பார்... என்னைப் புரியவில்லையா?...

அங்குலி : ...ஹூம்... தாயாவது மகனாவது?... எனக்கு யாருமேயில்லை யாருமேயில்லை... என் எல்லைக்குள் வந்த எவருமே மீண்டும் தப்பிப்போனது கிடையாது... ஆனால் நீ ஒரு பெண் போய் விடு... என் ஆத்திரம் எல்லை மீறுமுன் போய் விடு... எனக்காக வரும் பெரு விருந்தை எதிர் கொள்ள இருக்கும் நான் உன்னைக் கொன்று என் பசியைத் தீர்த்துக்கொள்ள விரும்பவில்லை... போய் விடு... இல்லையேல்... (பற்களை நெறுமுகிறான்)

அவள் : நான் போக மாட்டேன்... நிச்சயம் போக மாட்டேன்... என் கண் முன்னால் நீ தண்டிக்கப்படுவதைப் பார்க்கு முன்னர் நான் அழிந்து போவதே மேல்... அதுவும் உன் கையால் அழிந்து போவதே மேல்... உன்னை வளர்த்து ஆளாக்கிய இந்த மார்பின் மீது உன் வாளைப் பாய்ச்சு... உன்னைப் போட்டு வளர்த்த இத் தோளின் மீது கத்தியை வீசு... உன் வெறிச் செயலையெல்லாம் என்னிடம் காட்டு... அப்போதாவது உன் வெறியடங்குகிறதா பார்ப்போம்...

அங்குலி: (கடுமைக் குரலில்) ஏய்! என்ன உளறுகிறாய்... நீ யாராக இருந்தாலும்... ஏன் என்னைப் பெற்றதாயாக இருந்தாலும் எனக்கு அக்கறையில்லை. என்னை எதிர்த்துப் பேசிய உன்னை என்ன செய்கிறேன் பார்...!

[வாளைக் கையில் எடுத்தவாறு அவளை நோக்கிக் காலடி எடுத்து வைக்கிறான். அப்போது பின்னால் ஒரு குரல் கேட்கிறது]

புத்தர் : புத்தம் சரணம் கச்சாமி!...... தம்மம் சரணம் கச்சாமி...... சங்கம் சரணம் கச்சாமி!......

அங்குலி: யாரது?... (திரும்பிப்பார்த்து) ஓ! துறவியா? என்னை கைப்பற்ற துறவிகளையும் மன்னர் அனுப்புகிறாரா!... ஏய்க் கிழவி! உன்னைக்கொன்று என் வாளை மாசுபடுத்த விரும்ப வில்லை... முதலில் இத்துறவியை அழித்துவிடுகிறேன்!...
[அவரை நோக்கி நடக்கிறான்]

அவள்: பகவானே! தாங்களா! உங்களையும் இந்தக் கொலைகாரன்முன் நிறுத்திவிட்டேனே... உங்கட்கும் ஆபத்தை தேடித்தந்து விட்டேனே!... (விம்முகிறாள்)

புத்தர். தாயே!... ஆபத்து ஒன்றுமில்லை. இதுவரை இருந்த ஆபத்து இனித்தான் நீங்கப்போகிறது. (நடக்க ஆரம்பிக்கிறார்)

அங்குலி: ஏய்!... துறவி! எங்கே போகிறாய்...நில்... நீ எங்கே சென்றாலும் என்னிடமிருந்து தப்பமுடியாது...
[அவனும் அவரைத் தொடர்கிறான். அவரைக் கைப்பற்ற முடியவில்லை]
இதென்ன ஆச்சரியம்... ஓடும் மானை... முயலை... பாயும் புலியையெல்லாம் விரட்டிப் பிடித்து விடுமென்னால் இந்த எளிய துறவியைப் பிடிக்கமுடியவில்லையே!...(உரத்தகுரலில் ஏய்! துறவியே! நில்! நில்! நிறுத்து உன் நடையை!

புத்தர்: (சாந்தத்துடன்) நான் எப்போதோ நிறுத்திவிட்டேன். நீ தான் இன்னமும் நிறுத்தவில்லை.

அங்குலி: (புரியா மயக்குடன்) ஏய்!... என்ன சொல்கிறாய்?

புத்தர். ஆமப்பா?... நான் எப்போதோ கொலைத்தொழில் புரிவதை நிறுத்தி விட்டேன். நீ தான் இன்னமும் நிறுத்தவில்லை...

அங்குலி: ஏய் துறவியே! போதும் உன் மயக்குவார்த்தைகள். உன் வார்த்தைச் சிலம்பங்கட்கு அறிவற்ற மக்கள் மயங்கலாம். ஆனால் நான் மயங்கமாட்டேன். உன்னை என்ன செய்கிறேன் பார் (முன்னால் நகர) ஆ!... என்னால் காலடி எடுத்து வைக்கமுடியவில்லையே! முன்னேற முடியவில்லையே!

புத்தர்: உன்னால் எப்படியப்பா முன்னேறமுடியும். பாவச் செயலும் பழியுணர்ச்சியும் நிறைந்த சகதிக்குள் நிற்கும் உன்னால் எப்படி முன்னேறமுடியும்... நீ முன்னேற வேண்டுமாயின் பழி யுணர்ச்சியை ஒழி. உன் பகைவனுக்கும் அருளும் நெஞ்சைப் பெறு. அப்போது உன்னால் எவ்வளவோ முன்னேறிச் செல்ல முடியும்.

அங்குலி: (மாறும் குரலில்) நான் எதற்காக பகைவனுக்கு பரிவு காட்ட வேண்டும்? அவனைப் பழிக்குப்பழி வாங்குவதே என் தர்மம்.

புத்தர்: அதுவல்ல உன் தர்மம். உலகிற்கு உழைப்பதே மனிததர்மம். தானழிந்து குலையை உலகிற்கு அளிக்கிறது வாழை. தான் இறந்து முத்தை அளிக்கிறது சிப்பி, தான் தேய்ந்து மண மளிக்கிறது சந்தனம்... தன் அழிவின் நிறைவிலே வாழ்வு பூரணத்துவம் எய்துகிறது... இதை அறியமாட்டாதவனா நீ!

அங்குலி: (மயக்க நிலையில்) என்ன சொல்கிறீர்கள் தாங்கள். குற்றம் செய்தவனை தண்டிப்பதே என் தர்மம்...

புத்தர்: குற்றம் செய்தவனை தண்டிக்க நீ யார்?... நீ எதற்காகப் பிறந்தாய்? குற்றம் செய்பவர்களை அழித்தொழிக்கவா?...

அங்குலி: ஆமாம்... குற்றவாளிகளை அழிப்பதே என் நோக்கம்.

புத்தர்: அதுவல்ல உன் தர்மம்... உலகின் குற்றவாளிகளை அழிப்ப தென்றால் உலகில் எவருமே இன்று இருக்க மாட்டார்கள். உலகில் பாவம் புரியாதவர்களே கிடையாது. ஒவ்வொரு நோக்கில் ஒவ்வொருவரும் குற்றவாளிகளே...

அங்குலி: போதும் உபதேசம்.

புத்தர்: இது உபதேசமல்ல வாழும் முறை... குற்றவாளிகளை அழிப்பதாக இருக்கக்கூடாது... உன் தர்மம் குற்றங்களை அழிப்பதாக இருக்க வேண்டும்... மனித மனங்களின் மாசைத் துடைப்பதாக இருக்க வேண்டும்.

அங்குலி: உலகில் ஒருவரும் அப்படி வாழ்வதுமில்லை... வாழ முடிவதுமில்லை. வீண் பிதற்றல்...

புத்தர்: அதற்காக நாமும் வீணே இருந்து விடுவதா... அங்குலிமாலா நீ ஏன் அதற்காக முயலக்கூடாது...? என்னைப்பார்...... (மனம் மாறும் அவன் நிலை உணர்ந்து) உனக்கு உரைக்க எதுவுமேயில்லை என்னிடம். பலநூல்பயின்று உண்மை உணர்ந்தவன் நீ!... ஆனால், உன்னிடத்தே படிந்துள்ள பழியுணர்ச்சி உன்னைச் சிந்திக்க விடவில்லை. பழியுணர்ச்சியை வளர்த்துச் சென்றால் அது தொடர்ச்சியான நாசத்தையே வளர்க்கும். இறுதியில் அதற்கே பலியாவாய். நீ நல்லவனாக மாறிவிட்டால்.. ஆமாம் அங்குலிமாலா... நீ சொக்கத்தங்கம்...... ஆனால் பாசிபடிந்ததங்கச்சிலை உன். பாசியை அகற்று. அன்பை சத்தியமாகக் கொள். உத்தம மகனாக உலகிலே சுடர் விட்டுப் பிரகாசிப்பாய்!...

அங்குலி: (முற்றுமுணர்ந்த நிலையில்) ஆ! என்னை ஆட்கொள்ள வந்த வள்ளலே தாங்கள்தான் கௌதம புத்தரா... அது. தாங்களாகத்தானிருக்க வேண்டும்... பகவானே...இனி நான் உங்கள் அடிமை... கொலைகாரனாகிய என்னையும் மனிதனாக எண்ணி அன்புடன் போதம் செய்த தங்கள் அன்பே அன்பு. அருளே அருள். இனித் தங்களின் தனிவழி நடக்கும் யாத்திரிகர்களில் நானும் ஒருவன் (கொலைக் கருவிகளை எறிந்து) என் மறத் தொழிலுக்கு துணை நின்றவர்களே... இனி உங்கள் துணை வேண்டியதில்லை...அறக்கடவுளே துணையாக வந்த பின் நீங்கள் எதற்கு ..

அவள்: பகவானே!... உங்கள் அன்பே அன்பு... இந்தத் தாயின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்து என் மகனை அவனது பாவச் செயலிலிருந்து தடுத்தாட்கொண்ட உங்களை எப்படிப் போற்றுவேன்.

புத்தர்: சரி .. அங்குலிமாலா... என்னைத் தொடர்ந்து வா!... இன்றிலிருந்து நீயும் என் சங்கத்தைச் சார்ந்தவனே! ..

அங்குலி: அப்படியே ததாகதரே!...

[புத்தர் வழித்தடத்தில் இருவரும் முன்னேறுகிறார்கள்]

திரை

## காட்சி-8

[மறுநாட் காலை. புத்தர் பத்மாசன கோலத்திலமர்ந்திருக்க, பக்கத்தே அங்குலிமாலன் – சீவர ஆடையணிந்து, மழித்த தலையுடன் ஒரு பிக்குவாகக் காட்சியளிக்கிறான். அப்போது பிக்கு ஆனந்தர் உள்ளே விரைந்து வருகின்றார்]

ஆனந்தர்: பகவானே!... பிரசேனஜித்து மன்னர் வந்து கொண்டிருக்கின்றார் ?...

புத்தர்: அப்படியா ?... வரட்டும்!...

[ஆனந்தர் போனதும், அங்குலிமாலனைப் பார்க்கிறார். அவன் எந்தவித சலனமற்றுக் காணப்படுகின்றான்]

பிரசேனஜித்து: (வந்து கொண்டே) வணக்கம் பகவானே!...

புத்தர்: கோசல மன்னா!...... வாருங்கள்! இந்தக் காலை வேளையில் என்னைத் தேடி வந்த காரணம்...?

பிரசேனஜித்து: வேறொன்றுமில்லை... தங்களை எச்சரிக்கை செய்யவே வந்துள்ளேன்!

புத்தர்: என்னை எச்சரிக்கை செய்வதா ?...

பிரசேனஜித்து: ஆமாம். ததாகதரே!... தாங்கள் அறபோதனை செய்ய காடு மேடெலாம் செல்கிறீர்கள். வழியில் ஆபத்து என்றால் எனக்கல்லவா அவதூறு ஏற்படும்! ..

புத்தர்: எனக்கென்ன ஆபத்து.... யாராவது துன்பம் விளைக்கக் காத்திருக்கிறார்களா என்ன ?

பிரசேனஜித்து: ஆமாம் பகவானே!... இங்குள்ள கானகத்தில் அங்குலிமாலன் என்னும் கொடிய பயங்கரவாதி சஞ்சரிக்கிறான். கண்ணில் எதிர்ப்படுவோரையெல்லாம் கண்ட துண்டமாக

வெட்டிக் கொலை புரிந்து அவர்கள் கட்டை விரலை மாலையாக்கி அணிகின்றானும்... அவனைப் பிடிப்பதற்காகப் பெரும் படையொன்றை அனுப்பியுள்ளேன்... அவன் பிடிபட்டு வரும் வரை தாங்கள் தனியே அவ்விடங்கட்கு செல்லக் கூடாது.

புத்தர் : அப்படியா! அவனைப் பிடித்தால் என்ன செய்வீர்கள் ?...

பிரசேனஜித்து : அந்தக் கொலைகாரனைக் கடுமையாகத் தண்டிப்பேன்...

புத்தர் : எப்படி ?......

பிரசேனஜித்து : அவனுக்குக் கடுமையான மரணதண்டனை விதிப்பேன்.

புத்தர் : அத்தண்டனையால் அவனழியலாம்... அவனது கொலை எண்ணங்கள் அழியுமோ ?...

பிரசேனஜித்து : (மயக்குடன்) ததாகதரே! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்... நானோ சாதாரண ஒரு நாட்டின் மன்னன்... நீங்களோ அறிவுலகின் ஜோதி... முடிசூடாமன்னர். ஞானப் பிழம்பு... என்னை இப்படிக்கேட்டால்...

புத்தர் : (சிரித்து) இல்லை... அங்கு அந்த கொடிய பயங்கரவாதிக்குப் பதிலாக அன்பையும், அறத்தையுமே துணையாகக் கொண்ட ஒரு புனிதனை கிடைத்தால்...

பிரசேனஜித்து : அதெப்படி முடியும்... கல் மலராகுமா ?

புத்தர் : அந்த அங்குலிமாலன் சீவர ஆடை பூண்ட புனித பிக்குவாகி அன்பே துணையாகி நின்றால்... என்ன செய்வீர்கள் ?...

பிரசேனஜித்து : அவனை நிச்சயம் வணங்கிப் போற்றுவேன்!...

புத்தர் : (அங்குலிமாலன் பக்கம் திரும்பி) இதோ! இந்தப் பிக்குதான் கண்டோர் மருள நின்ற அங்குலிமாலன்!

பிரசேனஜித்து : என்ன!... உண்மையாகவா!...

புத்தர் : ஆமாம்! நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை.

பிரசேனஜித்து : (அங்குலிமாலனிடம்) புனிதரே!... தாங்கள் தான்...

அங்குலி : ஆமாம்.. அந்தக் கொடியவனே நான்... ஆனால் நம் பகவானே என்னை மாற்றி விட்டார்... கல்லையும் மலரச் செய்து விட்டார்.

பிரசேனஜித்து ; (பணிவுடன்) அடிகளே!... இனித் தங்களால் என் நாட்டிற்கு நன்மையே கிட்டும்... தங்கட்கு ஏதாவது உதவி...

அங்குலி : எனக்கு எதுவுமே வேண்டியதில்லை. நான் எல்லாவற்றையுமே துறந்தவன்... என்னிடம் ஏற்கனவே மூன்று சீவர ஆடைகள் உள்ளன... உங்கள் அன்புக்கு என் நன்றி...

பிரசேனஜித்து : (புத்தரை வணங்கி) அடிகளே! நும் பெருமையே பெருமை. எனது படைப்பலங்கள் சாதிக்க முடியாதவற்றை உங்கள் அன்பு சாதித்து விட்டது... அறம் சாதித்து விட்டது...

[வணங்கிப் போகிறான்]

— திரை

[அடுத்த இதழில் நிறையும்.]

# கந்தர் அம்மான்-செல்லாச்சி

செல் : இங்கிலீசுக்காரங்கள் என்னன்ன கண்டு பிடிக்கிறுங்கள். எங்கடையள் என்னத்ததைக் கண்டு பிடிக்குது!..

கந் : அடியே! எங்கடை தமிழங்கள் மாடு பிடிக்கிறுங்க...

"அன்பு இல்லம்" சுதா

---

செல் : ஏன் விழுந்தடித்துக்கொண்டு வாறீர்?

கந் : ஆரோ ஒருத்தன் இங்கிலீஸிலை என்னே கேட்டான் கொஞ்சம் பொறுத்துக்கொள் போயிலை வாங்கிக் கொண்டு வாறன் எண்டு சொல்லிப் போட்டு ஓடி வந்திட்டன்.

கைதடி சு. சிவபாலன்

---

கந் : இஞ்சரும் நரைமுடியொண்டு தங்கக் கம்பியாட்டப் மினுங்குது.

செல் : ஏன் பாருங்கோ அதையும் தரட்டே கொண்டுபோய் அடைவு வைக்க.

யாழ்ப்பாணம் ம. யேசுராசா

---

செல் : ஐய்யோ பாவம் இந்தப் பெண்ணுய் பிறந்தவளுக்கு யார்தான் அடிச்சாங்களோ வாய் எல்லாம் ரத்தமாக் கிடக்கு!

கந் : உது இரத்தம் இல்லை, சொண்டுக்குப் பூசிற சிவப்புச் சாயம். உதுதான் இப்பத்த நாய்கரீகம்.

யாழ்ப்பாணம் வே. செல்லத்துரை

---


கந் : என்ன செல்லாச்சி! விறு விறு எண்டு போறுய்?

செல் : இல்லை அம்மான். அவளொருத்தி சொன்னுளாம், என்னை என்ர ஆத்தை வாழைக்க பெத்து, வடலி ஓலையில் போட்டு வளத்த குணத்தைக் காட்டுறேனும். அதைத்தான் என்னெண்டு கேட்கப்போறன்.

கந் : இஞ்சே! உனக்கும் புத்தி இல்லை எண்டெல்லோ சொல்லப் போகினம். கொம்மா வாழும் போதுதான் உன்னைப் பெத்தவ. நல்ல வடலிக் குருத்துச் சார் ஓலை எடுத்து தடுக்குப் பின்னி அதில் வளத்தித்தான் வளத்தவங்க. என்னையும், எல்லாரையும் அந்தக் காலத்தில் அப்படித்தானே. இதுக்கு ஏன் கோவம் வருகுது? வா - வா!

மன்னம்பிட்டி சி. பி. அலோசியஸ்

---



அனுப்ப வேண்டிய முகவரி,
கந்தர் அம்மான், 29 கண்டி வீதி யாழ்ப்பாணம்

தமிழில் நல்ல கட்டுரைகளைக் காண்பது இன்று அத்திப் பூக்களாகவே உள்ளன. அத்தகைய அத்திப்பூக்களில் இதுவு மொன்று. வளமான சொற் கூட்டங்களில் ஆழமான கருத்துக்கள் பளிச்சிடுகின்றன. கட்டுரையாளர்-இலங்கைப் பல்கலைக் கழக மெய்யியற்றுறை விரிவுரையாளராகப் பணிபுரி கின்ருர். —செம்பியன்.

# சொற்களும் சூர்யாஸ்தமனமும்.

செ. வே. காசிநாதன்

## சொற்கள்

பிரிவுத்துயர், தமிழின்பம், கழிந்த இளமை,
கடந்த நாட்கள், எதிர்காலம்,
அறியாமை இருள், மகிழ்ச்சிக்கடல்,
சூரியன், சந்திரன்,
சந்திரோதயம், சூர்யாஸ்தமனம்,

கேட்டுக் கேட்டு அலுத்துப்போன சொற்கள். சொற்களை மீண்டும் மீண்டும் கேட்கிறபோது அலுப்புத்தான்வரும். ஏனென்ருல் சொற்களுக்குள் பேதம் இல்லை. அச்சிலே-குரலிலே-ஒலியிலே இருக்கிற பேதம் அதிகமில்லைத் தானே. நாங்கள் சொற்களுக்குள்ளே அகப்பட்டுப் போனேம். மொழியை அறிந்துகொண்டதனுலே பொருளை மறக்கமுடிகிறது.

'மரம்' — ஓம் — ம-ர-ம்.
'இலை' — ஓம் — இ-லை.
'பழம்' — ஓம் — ப-ழ-ம்.

காகம், காதல், மாலை எல்லாம் இப்படித்தான் கெட்டுப்போய் விட்டன.

நாங்கள் இப்போது பார்ப்பதில்லை. மரம் மரம் மாதிரித் தானே இருக்கும். பழம் பழம் மாதிரித்தானே சுவைக்கும். நாங்கள் இப்போது அனுபவிப்பதில்லை. சொற்கள் இருக்கின்றன. அவற்றை அறிகிருேம். காட்சிக்குப் பதிலாகக் கருத்து வந்துவிட்டது,

பல்கலைக் கழகத்துக்கு வந்த முதல் நாளை நினைத்துப் பாருங்கள் அன்று கண்ட காட்சிகள் எல்லாம் கருத்துக்கள். ஆகிவிட்டன.

| கருத்துக்கள் | | சொற்கள் |
|---|---|---|
| மாஸ் ஹோல் — | ஓம் — | மாஸ்ஹோல். |
| ஹில்டா — | ஓம் — | ஹில்டா. |
| சுந்தரலிங்கம் — | ஓம் — | சுந்தரலிங்கம். |

பெயர் தெரிந்தால் ஆளைத்தெரியாது. பொருளைத் தெரியாது, முதல் முதலிற்பார்க்கும் போது தெரிகிற அழகு இதுதான். அப்

போது தான் நாம் பார்க்கிறோம். பெயரைத் தெரிந்துகொண்ட பிறகு பார்ப்பதில்லை. புதிய இடங்களுக்குப் போவதில் உள்ள இன்பம் இது. பெயர் தெரியாத காட்சிகள் புவியியல் புத்தகங்களும் பிரயாண விளம்பரங்களும் பெருக இந்த இன்பமும் அற்றுப்போம்.

குழந்தைக்குக் கருத்துக்கள் குறைவு. காட்சிகளை, அவற்றின் தனித்தன்மைகளை ஒதுக்கி, பொதுத் தன்மைகளைச் சேகரித்து ஒரு சொல்லாலே கொன்றுவிடும் திறன் அவனுக்கு இல்லை. அவனுக்கு அறிவு குறைவு.

இதன் விசித்திரங்கள், அதன் விசித்திரங்கள், அதோ அந்த மற்றதன் விசித்திரங்கள் எத்தனை? மலர மலர நோக்குகிறான் குழந்தை.

''காகங்களைக் கலைத்து விடு'' என்கிறாள் தாய்.

இதுவும், அதுவும், அந்த மற்றதுவும் அவற்றின் விசித்திரங்களும் அவன் வாழ்க்கையிலிருந்து கலைந்து போகின்றன. இனி அவை காகங்கள், அவைஎன்னத்தைத்தான் செய்யட்டுமே. தலை கீழாக நின்றாலும் காகம் காகமே. காகம் என்கிற கருத்து தலை கீழாக நிற்கிற விசித்திரத்தினால் பாதிக்கப்படுவதில்லை.

கவிஞன் குழந்தையை போல என்கின்றார்கள்.
கவிஞன் குழந்தையைப்போல
கவிஞன் குழந்தையைப்போல

கொஞ்சம் பார்ப்போம். கவிஞனுக்கும் குழந்தையைப்போல கருத்துக்கள் குறைவு. அவனுடைய கருத்துக்கள் அவனுடைய பார்வையை மறைப்பதில்லை. அவனுடைய சொற்கள் கருத்துக்கள் அல்ல. அவனுடைய சொற்கள் அவனுடைய காட்சிகளைக் காட்டப் பிரயத்தனம் செய்கின்றன. அவனுடைய முயற்சி வெற்றிபெறும்போது நாங்களும் கொஞ்சம் காண்கிறோம். பொருளின் தனிமையைக் கொஞ்சம் உணர்கிறோம்.

மலை என்ன நிறம்? அது உங்களுடைய கருத்தைப் பொறுத்தது. கறுப்பு? பச்சை? கறுப்பும் பச்சையும்? கல்லுக் கறுப்பு-கல்லுக்கு மேலே இருக்கிற புல்லுப் பச்சை?

மஞ்சள், சிவப்பு, பச்சை, நீலம், வெள்ளை, கறுப்பு, ஊதா எல்லாவற்றையும் போட்டு மலை என்று கீறினார்கள். பிறகு பார்த்தபோது எல்லாம் தெரிந்தது.

ஆனால் இந்தக் கண்ணைத்திறந்து விடுகிற வேலையிலே ஆபத்துண்டு.

கலைஞன் காட்டிய காட்சி இன்னொரு கருத்தாய்ச் சமைந்து விடும். கருத்துக்களைச் சமைப்பதில் நாம் சூரர்கள். அல்லது எம்மிலே சமைவதில் கருத்துக்கள் சூரர்கள்.

அலைகள் வெண்புரவிகளைப் போல
அலைகள் வெண் புரவிகளைப் போல

வெண்புரவியிலிருந்து இறங்க முடியாது போய்விடும். கருத்து எம்மை அதோடு சேர்த்து ஒட்டிவிடும்.

கொடி பெண்ணைப்போல
பெண் கொடியைப்போல
அலைகள் எழினி காட்ட
எழினிகள் அலை காட்ட

உவமைகளின் தொழில் கொலைத் தொழில்: தெரிந்ததைக் கொண்டு தெரியாததை உணர்த்துவதாம். தெரிந்தது வேறு தெரியாதது வேறு. அது ஒரு தனியன். இது ஒரு தனியன். அப்படியிருக்கும்வரை அதனால் இதை உணர்த்துவது இயலாத காரியம். தனித் தன்மையை மறைத்து பொதுத் தன்மையைப் பற்றவேண்டும். காட்சியை மறைந்துக் கருத்தைப் பற்றவேண்டும். அப்படித்தான் உவமைகள் செயற்படுகின்றன. அப்படியானால் உவமைகளை ஏன் பயன்படுத்துகிறார்கள்? இவ்வளவில் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்; அறிவூட்ட.

உவமைகள் ஒழிகவெனப் பிரார்த்திப்போம். இதனாலேதான் ஓவியர்கள் சித்திரம் 24, சித்திரம் 25, என்று தங்கள் சித்திரங்களுக்கு மகுடமிடுகிறார்கள். கவிஞர்கள் பாவம், அவர்களாற் சொற்களிடமிருந்து தப்பமுடியாது.

அனுபவத்தின் தனிமையும், புதுமையும் கருத்தில் அழிந்து போகின்றன என இதுவரை சொன்னோம். சொற்களைக் கொண்டு தனது அனுபவத்தை வெளிப்படுத்த முயலும் கவிஞன், சொற்களின் கருத்துக் குறிப்பு ஓங்கி நிற்கும் வரையில் தனது முயற்சியிற் தோல்வியடைவான் எனலாம்.

> ''சூர்யாஸ்தமனத்தின் அற்புத சௌந்தர்யங்களை எழுதிப் பிறர் மனதில் படும்படி சொல்வது சாத்தியமில்லை.........க்ஷணந்தோறும் புதிய புதிய விநோதங்கள் மாத்திரமேயன்றி இன்னுமொருவிசேஷமுண்டு. நேற்று இருந்தது போல இன்றைக்கு இராது. இன்று இருப்பது போல நாளை இராது. தினந்தோறும் வெவ்வேறுவியப்புக்கள், வெவ்வேறு உலகங்கள், வெவ்வேறு மஹிமைகள், வெவ்வேறு கனவுகள், வெவ்வேறு ஆனந்தங்கள், வெவ்வேறு அநிர்வசனீயங்கள்''

பாரதி கையாண்டுள்ள சொற்களைப் பாருங்கள். அவற்றுள் ஒன்றும் சூர்யாஸ்தமனத்தை வருணிக்கவில்லையெனலாம். தனது அகத்தே எழுந்த உணர்ச்சியைத் தனது வியப்பைக் காட்ட அவன் முயல்கிறான். ஆனால் விடயம் இத்தோடு முடியவில்லை. வருணனை வருகிறது.

> ''பச்சைத் தகடு பின்புறத்திலிருக்கும் மின் தகட்டை முழுதும் மறைத்துக்கொண்டிருக்கும். ஆயினும் இடையிடையே பின்னுள்ள வட்டத்தின் வயிரக்கிரணங்கள் கண்மீது பாயும்..................அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சி விட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்! நீல ஏரிகள்! கரும்பூதங்கள்!.................. நீல ஏரியின் மீது மிதக்கும் தங்கத்தோணிகள்! எரிகின்ற தங்கஜரிகை போட்ட சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்..............''

திமிங்கிலம் - தெரியுந்தானே – யானையிற்பெரியது
குட்டியீன்று பால்கொடுக்கும்.
தோணி?–தோணிகள் பலவிதம்.
பாரதி தன்னைச் சுதாகரித்துக் கொள்கிறான்.
''போ, போ என்றால் அதை வர்ணிக்கமுடியாது'!

பாரதியிற் குறைசொல்ல முடியாது 'அநிர்வசனீயம்' என்று நிறுத்தும் சுதந்திரம் எல்லோருக்கும் இல்லை. 'நேதி நேதி' என்று விட்டு எல்லோரும் நின்றுவிடமுடியாது.

பாரதி சங்கரனோ, புத்தனோ அல்லன். அவனுக்குக் கவிதை தொழிலும் ஆயிற்று.

நன்றி: இளங்கதிர்

---


# "விவேகி"

திங்கள் இதழ்

வருட சந்தா 4-00

தனி இதழ் -40

நிர்வாகி,

29, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்.

தொலைபேசி ; 274

# பிணைப்பு

திறந்த மேனியோடு தன்னை மறந்த உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த கல்லீமனவலினால் தொடர்ந்து சிலும்பற் பாயில் கிடக்க முடியவில்லை. கடலில் விழுந்து விளையாடி வரும் வாடைக் காற்று உடலைத் தாக்கவே, உறக்கம் கலைகிறது. ஆயினும் அலுப்பும் சோர்வும் உடலை நிமிர்த்த முடியாதவாறுபாதித்தமையால் அரையில் வலிந்து கட்டிய சாறத்தை இழுத்து உடலை மூடுகிறான். உடலுஷ்ணமே குளிருக்கு இதமாகிறது.

மேலும், மேலும் குறவணன் புழுவென வளைந்து சாறத்துக்குள் ஐக்கியப்படும் அவன் உடல் பார்ப்பவர் கண்களுக்கு நாலு முழத் துணிக்குள் இருள் ஐக்கியப் படுவது போலத் தெரியும்; அத்தனை கறுவல் அவன்.

---

ம. பி. ஜேக்கப்

---

கிழக்குப் பக்கமாக முகத்தை திருப்பிக் கிடக்கும் அவனது தலைமாட்டுக்கு சரி செங்குத்தாக, மேலே தொங்குகிறதுஉறி ஒன்று. அதனுள்ளிருக்கும் பழைய சோறும், மீன் குழம்பும் முகட்டு வளையிலிருக்கும் எலிகளின் நாசிகளுக்கு ருசிமணமூட்டவே அவற்றை இரசித்துச் சுவைக்கும் வேட்கையோடு வந்த எலிகளில் ஒன்று தவறி அவன்மீது விழுந்து விடுகிறது.

அதிர்ச்சியினால் தூக்கம் முற்றாக் கலைந்த கல்லீ மனவல் சரிந்து எதிர்த்திசையை நோட்டமிடுகிறான். இருளை வழித்துக் கொட்டத்திராணியற்ற நிலையில் எண்ணெய்க் குறைவினால் மங்கி மங்கி மின்னுகின்றது சிமிள் விளக்கொன்று அதன் ஒளியைக் கூட நிலையாக செய்யமுடியாது அலைக்கிறது வாடைக் காற்று. வேய்ச்சல் போகந் தப்பிவிட்டதால் உக்கிய ஓலை நெட்டிகள், சர, சரவெனச் சப்தமிட்டு உதிர்கின்றன. சில நாட்களுக்கு முன் ஓலை கிளம்பியதால் திறந்து கிடக்கும் முகட்டினூடாக தேய் நிலவின் ஒளிப்பால் வடிகிறது. அந்த நிலவொளியை ஆதாரமாக்கி குடிசையைப் பார்க்கிறான். ஒதுக்குப் புறமாக அவனது தாயும், சகோதரியும் அசதியோடு மூலையில் உறங்குகிறார்கள். சோர்ந்து கிடக்கும் அவர்களைப் பற்றிய நினைவால் தூண்டலிற்பட்ட மீனாகிறது அவனது உள்ளம். நெஞ்சிற் பீறிட்டுச் சுரந்த துன்பத்தின் சின்னமாக கண்ணிமைப் புருவங்களுக்கிடையே வெடித்துச் சுரந்த கண்ணீர் கன்னப் பிராந்தியத்தில் கோடுகிழித்தும் விடுகிறது.


"கொக்கரகோ!... கொக்கரகோ!..."

கூரையிலிருந்த சேவல் ஒலி தொடர்கிறது.

காலத்துக்கு எல்லை வகுக்கும் அவ்வொலி அவனைப் படுக்கையில் தொடர்ந்து கிடக்க விடவில்லை. அவிழ்ந்து கிடந்த சாறத்தை அவசரமாகக் கட்டுகிறான்; கன்னப் பிராந்தியத்தில் வழிந்து வாயில் முட்டி உப்புக் கரிக்கும் நீரைத் துடைத்துக் கொண்ட

தும், அங்கங்கள் ஒவ்வொன்றும் தம் போக்கில் செயல் பட முனை கின்றன.

தலைமாட்டுக்குள்ளிருந்த மடுப்பெட்டியைகையாற்தடவித் தடவி நீண்ட ஆராய்ச்சியின் பின் அதனை எடுக்கிறான். அதனுள் ளிருந்த பீடியில் ஒன்றை உதட்டில் புதைக்கிறான். நெருப்பெட்டி குச்சின்றிக் காலியாக இருந்தமை யால் மாயும் நிலையிலுள்ள விளக்கை முகத்துக்கு நேரே பிடித்து பீடியை மூட்டிக்கொண்டு இரண்டு தரம் புகையை இழுத்து மூக்காலும் வாயாலும் வெளி யேற்றிய போது சிறிது உடலில் உற்சாகம் பிறப்பதாக உணர்கி றான்.



மணிக்கதை

குடிசைக் கொடியில் தொங் கிக் கொண்டிருந்த நாலுமுழத் துண்டை உதறித் தலையிற்சுற்றிக் கொள்கிறான். மூலையிற் கிடக்கும் ஓலைப் பெட்டியொன்றை எடுத்து அதனுள் கடலுக்குக் கொண்டு செல்வதற்கான பழைய சோற் றுச் சட்டியை திணித்துக் கக்கத் துள் வைத்துக் கொண்டு குடி சைக்கு வெளியே வருகிறான்.

நேற்று கடலுக்குக் கொண்டு சென்ற தூண்டல் கொழுவிய கயிற்றுக் கோர்வைகள் இன்னும் முற்றத்துக் கொடியிலேயே கிடக் கின்றன. தூண்டிற் கோர்வை யுடன் தாழ்வாரத்தில் சாத்திய மரக்கோலை எடுக்கும் அவனது நாசியை சாராய நெடி துளைக் கின்றது.

குனிந்து கீழே பார்த்த விழி களில் கிழிந்த சாக்கில் கால்களைப் பரத்தியபடி கிடக்கும் தந்தை தெரிகிறான். மனவலின் உள்ளத் தின் அடித்தளத்திலே முட்டி, மோதிக் கொண்டிருக்கும் வெறுப் பும் ஆத்திரமும் கொப்பளிக் கிறது... நறு நறவென ஓசை யிடுகின்றன பற்கள். கடந்த இரவு பதினொருமணி வரை நிகழ்ந்த காட்சிகள் சலனப் படமாக நெஞ்சில் விரிகிறது...

''தூ!'' இவனும் மனிதனு; பிள்ளைகளைப் பெற்றால் மட்டும் போதுமா ?...... அதுகளைக் காப் பாற்ற வேண்டுமே என்ற எண் ணமே கிடையாத மாட்டுப் பிறப்பு உழைப்பதையெல்லாம் குடிக்கிறான். இவன் குடி எங்களு டைய சீவியத்திலேயல்லோ மண் ணைப் போடுகிறது. எங்கட தலை யெழுத்து. ஐயோ!...... ஆச்சி இவனுடன் எத்தனை காலம்தான் உத்தரிப்பாள். பத்தாக்குறைக்கு எங்களையும் இவனோடு சேர்த் தெல்லோ...... உத்தரிக்கும்படி இந்தக் கண் கெட்ட கடவுள் விட்டிருக்கிறான்; விடிந்தா பொ ழுதுபட்டால்; ஊர் பேர் தெரி யாத தேவடியாள் வீடே கெதி என ஊரெல்லாம் புகையுது... இரவிலே ஒரே கச்சடா; இந்த வயதிலும் உந்தக் குணம் விட்டுப் போகவில்லை; அறுதலி மகன்; அதுவும் மாம்பழம் போன்ற பெண் குஞ்சை வைத்துக் கொண்டு இப்படி நடக்க எப்படி மனம் வருதோ ?''

''கரையில் வள்ளத்தைக்கட்டியவுடன் எப்படி பாய்ந்து கொண்டு பறியுடன் போகின்றவன் சாராயப் போத்தலோடை அல்லோ இப்பவருகிறான். அப்படி வந்தாலும் சும்மாயிருந்தால் பறுவாயில்லை. எங்கையடி சோறு என்று அதட்டல் சத்தம். ஆச்சியும் தங்கையும் நடு நடுங்கிப் போய் அல்லோ!... நிற்குதுகள்; அதுகளைச் சும்மா விடுவானா!... அடித்து உதைத்து ஊர் சிரிக்க வைக்கிறான்; இவனுக்கு என்ன தெரியும்; அடுப்பங்கரையில் சாம்பல் குழித்த கோழியைக் கேட்டால் அது கூடச்சொல்லும்; அப்பு!... குடிக்காதையனை குடித்தால் செத்துப் போவாய் என்று பல முறை சொல்லியும் இவன் கேட்டானா?... தூண்டலில் ஆப்பிடும் மீன்களைப் போல இவனையும், குரவளையைப் பிடித்து திருகிக்......?...

விடியற்காலையில் ஆத்திரத்தில் எழுந்த சிந்தனைச் சாறு வியர்வையாகி தேகத்தில் இருந்து முத்து முத்தாகச் சொரிந்து கொண்டிருந்தது.

நெஞ்சில் சுரந்த வெறுப்பு வார்த்தைகளாகி உதட்டைப் பிய்த்துக்கொண்டு வருவதை அவனால் தடுகக்முடிதுவில்லை. யாரோ, ஒருவனுக்குச் சொல்வது போல தனக்குத்தான் இவ்வளவையும் சொல்கின்றான்.

''கொக்கரகோ!...'' மீண்டும் கூவுகிறது சேவல். தன்னை மறந்துவிட்ட அவனை தொழிலுக்குப் போக எச்சரிக்கிறது அவ்வொலி.

குடிசையின் தாழ்வாரத்தின் அண்டினால் போல சாத்தியிருந்த தோணிப் பாயையும் பூச்சிக் கூடை, பறி, தூண்டற் கோர்வை என்பனவற்றை மரக் கோலில் கொழுவி தோளிற் தூக்கி வைத்துக் கொண்டு நடக்கிறான். மணலில் கால்கள் தொம்! ...தொம்! என்ற சத்தத்தை எழுப்புகிறது.

கடல் கரையில். அலைகளில் எற்றுண்ட தோணி நிலையற்று நயம் புரிகின்றது. தோணியை நோக்கி நடந்துகொண்டிருந்தவன் குறுக்கிட்ட சரிந்த பூவரச மரத்தின் பாறிய வேர்களைக் கடக்கும்போது தடுக்குற்றுத் திரும்புகிறான், மங்கிய ஒளியில் யாரோ தன்னைத் தொடர்ந்து வருவதாகப் படுகிறது. சற்று நிதானித்துப் பார்க்கிறான் தொழிலுக்குத் தகப்பன் தன்னைத் தொடர்கிறதை உணர்கிறான். முகத்தில் மீண்டும் வெறுப்பின் சுடர் கொப்பளித்துக்கொண்டு இருக்கிறது.

நிலவின் ஒளி முழு மூச்சாக கரையை ஆக்கிரமிக்கிறது. நிலவின் ஒளியில், கறுத்த நிழல் விழுத்தியபடி அவனது ஓடம் நிலையற்று அலைகிறது.



ஓடத்தை அவிழ்த்துக் கொண்டு கரையில் இருந்த பொருட்களை ஏற்ற முனைகிறான். மௌனமாகத் தந்தை சில பொருட்களை ஓடத்தில் ஏற்ற ஒத்தாசை செய்கிறான். வேண்டா வெறுப்பாக அந்த உதவிகளை ஏற்கவே வேண்டியிருக்கிறது.

சாக்காட்டின் அமைதியில் புரள்கிறது அப்பிராந்தியம்.

இருவருடைய மௌன விரக்தியைக் கலைப்பது போன்று கடலில் 'ஓ!... ஓ!' எனப் பாய்ந்து வந்த பேரலைகள் ஓடத்தை ஒரு பாட்டம் புரட்டி விடுகின்றன. "முதுகைக் கொடுத்து சாம்பு" என்று இருவர் வாயிலிருந்து ஒரே நேரம் வந்த ஒலிகள் ஒன்றாய்ச் சங்கமிக்கின்றன. ஆனால்!....... யார் யாருக்கு வேண்டுகோள் விடுத்தது என்று இருவருக்குமே புரியவில்லை.

நீண்ட பிரயாசையுடன் ஓடத்தை தள்ளிப் பிடித்து அதில் ஏறிக் கொள்கிறான் மனவல். மன வெறுப்பினால் தந்தை வள்ளத்தில் ஏறிக் கொண்டானா?... இல்லையா என்பதையே அவன் கவனிக்கவில்லை. தண்டைப் போட்டு வலித்துக் கொண்டு ஓடத்தைச் செலுத்துகிறான். அவன் ஒரு வகையாக நடு மரத்தின் கயிற்றில் பாயை பிணைத்து பாயை ஏற்றுகின்றான். சீராக்கிய ஓடம் தன் வழமையான இஸ்!... இஸ்!... என்று சிறகை சாய்த்துப் பறக்கும் ஆலாப்பறவை போன்று பாயுடன் பாய்ச்சல் காட்டுகிறது

வான மண்டலம் எங்கும் சிறிய கார் மேகக் கூட்டம் சஞ்சரித்துக் கொண்டு இருக்கிறது. இதனால் அவனது ஊனக் கண்களுக்கு அலைகளைக் கீறிக்கொண்டு பாய்ச்சல் காட்டும் ஓடத்தின் வெண் நுரையைப் பார்த்தானே ஒழிய சூழவிருந்த பிராந்தியத்தைக் கவனிக்கவில்லை.

மையத்தில் இருந்த கார் இருள் அகன்றபின் சரிந்த நிலாவின் ஒளிச் சிதறல் கடல் பிராந்தியத்தை துலங்கச் செய்கிறது. அவன் சற்று நிதானத்துடன் ஓடத்தையும் கடல் பிராந்தியத்தையும் நோட்டம் விடுகிறான். அவனது தந்தையைக் காணவில்லை என்பது புலனாகியது...

"?......"

அவனது சிந்தனையின் சிதறல் மீண்டும் கோடிடுகிறது.

குடிகாரன்தானே! வெறியில் வந்தவன் தன்பாட்டுக்குத் திரும்பிப் போயிருப்பான். தொழிலுக்கென்று கூப்பிடாமல் வந்தவர் சொல்லாமல் போகமாட்டாரே! ஒருவேளை வெறிமயக்கத்தில் விழுந்து கிடக்கிறாரே, எங்களுக்குள்ள வேற்றுமை இருக்கலாம் அது குடும்ப விஷயம். தொழிலில் நானும் அவரும் சக தொழிலாளிதானே!... அந்த அலைஎழுந்த சத்தத்துடன் முனகல் ஒலி கேட்டதே!... அது வாடி நாயின் ஊளையல்லோ... எதுக்கும் பார்த்தால் என்ன?... அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பால் தூண்டப்பட்டவன் விரைவாக ஓடத்தை கரையைநோக்கித் திருப்புகிறான்

கரையில் பாசைளுக்கிடையே கிடக்கிற தந்தையின் தலையில் இருந்து வடியும் செம்மையை அலைகள் பாய்ந்து கழுவும் காட்சி அவனையே கதிகலங்க வைத்தது அவன் வள்ளத்தில் இருந்து குதித் ஓடுகிறான்.

என்ன பரிதாபம்!!... தந்தையைத் தொட்டுத் தூக்கிக் கொண்டு தனது குடிசையை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருக்கிறான். தந்தையின் நெற்றியிலே இருந்து

வழிந்த செந்துளிகள் அவனது மேனியிலும் பட்டு வடிகிறது.

கடற்கரையில் அங்கொன்று இங்கொன்ருகக் கட்டியிருந்த வள்ளங்கள் கடலுள் நுழைந்து செல்கின்றன. புறத்தே திரும்பிப் பாராது தகப்பனைச் சுமந்து குடிசைக்குள் செல்கிருன்...

தகப்பனிடம் பலமான அடிகளை வாங்கிய தாயின் முகத்தில் இவ்வளவு தவிப்பு ஏன்?.........

"அப்பு!.. அப்பு!... அப்புவுக்கு என்னண்ணே என்று கேட்கும் தங்கையின் பாசத் துடிப்புக்கெல்லாம் குடும்பத்தின் அதீத அன்பின் தொடர்வையல்லவா காட்டுகிறது.......

கல்லீ மனவல் தந்தையின் செயலற்ற உடலைக் கிடத்திவிட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக வண்டிக்காகச் செல்கிருன்

அவனது செவிப்பாறையைத் தாய் வைக்கும் ஓலம் தாக்கி குடும்பம் என்ற தேன்கூடு இடையிடையே தம்முள் பிணக்கமுறும் குளவிகளில் குலைவதில்லை என்னும் உண்மையையல்லவா, காட்டிக் கொடுக்கிறது.

கல்லீ மனவல் போகும் கிழக்குத் திசையிலே வானில் குருதி கொப்பளிக்கப் பிரசவித்த குருளை குட்டியென எழுகிருன் பருதி. அந்தப் பருதியை வரவேற்க குருவிகளும் காக்கைகளும் இன்ப நாதம் எழுப்புகின்லன.

"ஏசுவே!...... அப்புவைக் காப்பாற்றும்" என்ற ஒரே ஒரு வேண்டுதல் அவனது நெஞ்ச உணர்வில் பிறக்க, உலகத்தை மறந்த பைத்தியமாகத் தன்னில் தானே சொல்லியபடி சோகமே விடியாத மனதுடன் ஓட்டமும் நடையுமாகச் செல்கிருன் கல்லீ மனவல்.

× × ×

## தேவ-நாடகம்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில்—தமிழ் சிறப்புக் கலை வகுப்பு மாணவர்களுக்கு பிரபல எழுத்தாளர் 'தேவன்-யாழ்ப்பாணம்' அவர்கள் எழுதிய 'தென்னவன் பிரமராயன்' என்னும் நாடகநூல் ஒரு பாடநூலாக இடம் பெற இருப்பதாக அறிகின்ருேம். இதனுல் தேவன் அவர்கள் ஈழத்து எழுத்தாளர்களுக்குப் பெருமை தேடித் தந்துள்ளார் என்பதுடன், பல்கலைக் கழகம் போன்ற பெரிய கல்விக் கழகங்களும் ஈழத்து எழுத்தாளரை கௌரவிக்கத் தொடங்கியிருப்பது, ஈழத்து இலக்கிய உலகிற்கு நல்ல எதிர்காலமுண்டு என்பதற்கு சிறந்த அறிகுறியாக விளங்குகின்றது.

## ?? இவன் யார் தெரிகின்றதா?

இவன் தான் நமது வாசகர்களின் அன்புக்குப் பாத்திரமாகப் போகும் 'குறும்புக் கண்ணன்'.

கலைந்த கேசமும், குறும்புக் கண்களும், நிறைந்த அவனது முகத்தைப் படம் பிடிக்க முயன்றோம், பறந்துவிட்டான். ஆனால், அவனை நமது ஓவியர் 'சௌ' அவர்கள் தமது தூரிகையால் படம் பிடித்து விட்டார். அடுத்த இதழில் இவனை இங்கு எதிர்பார்க்கலாம்.

ஆனால் — இவனிருக்கிறானே. படு குறும்பன். பாடசாலைக்கு அனுப்பிவைத்தால், அங்கு அவன் ஆசிரியரையே கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டான். இந்த மகா புத்திசாலியை இங்கு வைத்து மாரடிக்கமுடியாது என்று வீட்டிற்கே அனுப்பிவிட்டார். அவனிடம் வளமாக அகப்பட்டு திணறுகிறார் ஆசிரியர் செம்பியன். அவன் கேட்கும் கேள்விகட்கு பதில் தெரியாமல் திணறிய அவருக்கு ஒரு யுக்தி வந்துவிட்டது. இவனையும் இவனது 'விவேகப் புதிர்'களையும் வாசகர்களிடம் தள்ளிவிட்டால்...... தான் தப்பிவிடலாமல்லவா!

பாவம் வாசகர்கள்,

அவர்கள் அவன் விடுக்கும் புதிர்களுக்கு பதிலளித்துவிட்டால் — பரிசளிக்கவும் எண்ணியிருக்கிறார்.

இனி அவன்பாடு. உங்கள்பாடு.

ஆனால் — பரிசளிப்பதுமட்டும் என்பாடு.

அதோ — என்னையே முறைத்துப்பார்க்கிறான். நான் வரட்டுமா.

விவேகப் புதிர்

1. சேட் வாங்கும்போது கழுத்து அளவைப் பார்த்து வாங்குகிறோம். 15 அங். அளவிடப்பட்ட சேட்டில் அதனருகே 38 என்னும் இலக்கமும் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த 38 எதனைக் குறிக்கும்?

விடையை ஒரு தபால் அட்டையில் எழுதி கீழேயுள்ள முகவரியை கத்தரித்து ஒட்டி அனுப்பவும்.

யுக்திப் புதிர்
29, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# நந்திக் கடல்

## 'செங்கை ஆழியான்'

ஆலோசனை மண்டபத்தில் சில கணப் பொழுதுகள் திகைப்பில் கழிந்தன. மன்னர் பரராச சேகரர் கூறிய செய்தி மங்கத்தம்மாளை யும், பரவை யையும் திகைப்பில் ஆழ்த்திவிட்டது. சங்கிலிகுமாரன் திகைத்தவன் போல் விருட்டென எழுந்தான்.

''மூத்த பட்டத்திளவரசர் இருக்க, இளையவனுக்குப் பட்டம் சூட்டுவதென்பது கதைகளிலும், காவியங்களிலும் நடக்கலாம். நடைமுறையில் நடக்க முடியாதது. உரிமை படைத்த என் அண்ணர் இருக்க, எனக்கு முடியா? என்ன கூறுகிறீர்கள், ஐயா ? நாட்டினது அபாய நிலையைப் போக்க விரும்பிய நீங்கள் மேலும் அபாயத்தைப் பெருக்கப் போகிறீர்கள் போலிருக்கிறது...''

''குமாரா!'' என அமைதியாக அழைத்தார், பரராசசேகரர் : 'நாட்டினது நிலையை நீ நன்கறிவாய்?... யாழ்ப்பாணத்திற்கு இன்று' தேவையானது மன்னனல்லன்... அரசைச் சூழ்ந்து வரும் அபாயக் கார் மேகங்களினின்றும் காக்கக் கூடிய திறமை படைத்த ஒரு வீரனே தேவை...?''

''வீரன்தானே வேண்டும்? என் அண்ணருக்கு என்ன குறை?'' எனச் சங்கிலிகுமாரன் கேட்டான்.

''என்னிலும் ஆற்றலும் இராஜ தந்திரமும் படைத்தவன் நீ என்பதை நாடறியும். மேலும், தம்பி, மன்னனாகும் ஆசையே எனக்கில்லை. மக்களது நோய்களைத் தீர்ப்பதன் மூலம் ஆனந்தப்படவே ஆசைப் படுகின்றேன். தம்பி, எங்கள் வார்த்தைகளைத் தட்டாதே. நாம் சொல் வதைக் கேள். யாழ்ப்பாணத்தின் மகுடத்தை நீ ஏற்கத்தான் வேண்டும்" என்றார், பரநிருபசிங்கர்.

''அண்ணா, நீங்கள் என்ன கூறினாலும் என்னால் இம் முடியை ஏற்க முடியாது அடுத்த முடிபதியாக வேண்டியவர்கள் நீங்கள். மூத்தவன் இருக்க இளையவன் முடி சூடுவது என்பது நல்லதுமன்று... நாட்டு மக்களால் விரும்பக் கூடியதுமன்று...''

''தம்பி, நீ என்ன கூறினாலும் என்னால் இம் முடியை இனிமேல் ஏற்கமுடியாது... அடுத்த மன்னனென்று உரிமை பெற்ற நானே இம் முடியை உனக்கு அளிக்கும்போது, மக்கள் என்ன கூற முடியும்? நாட்டின் இன்றைய சூழ் நிலையை உணர்ந்த எவனும் நீ மன்னனாவதையே விரும்புவான்... என்ன கூறுகிறாய், தம்பி! ஒப்புக் கொள்..."

சங்கிலி குமாரன் சிந்தனையிலாழ்ந்தான். அது வேளை பரவையின் குரல் 'கணீர்' என ஒலித்தது.

''அண்ணா, நான் கூறுவதைக் கேளுங்கள்.''

"என்ன பரவை?" என்றார், பரநிருபர்.

''உங்களுக்கு முடி சூட விருப்பமில்லை என்றால் அடுத்துப் பட்டத்திற்கு உரியவர் யார்?''

''தம்பி தானம்மா!''

''இல்லை... அண்ணா! அடுத்துப் பட்டத்திற்குரியவர் சின்னண்ணா வல்லர்...''

''பின் யார்...?''

''தந்தைக்குப் பின் அரசனாவது மகன் தானே? அது தானே இருந்து வரும் முறை?''

''ஆமாம்...''

''மூத்த அண்ணன்மார் இருவருக்கும் புத்திரர்கள் இல்லாதபடியினால் தானே, யாழ்ப்பாணத்தின் முடி உங்களை நாடுகிறது. அண்ணர் வீரபண்டாரத்திற்கு ஒரு மகன் இருந்திருந்தால் அவன்தானே இன்றைய மன்னன்... அதுபோல்...''

''அது போல...''

''உங்களது முடியை அடுத்து ஏற்க வேண்டியவர் உங்களதுமகன்...'

''யார் பரராசசிங்கனா?''

பரவையின் பேச்சு உண்மையில் யாவரையும் திகைப்பில் ஆழ்த்தி விட்டது. திகைத்துப் போன பரநிருபசிங்கர் திகைப்பை வெளிக்காட்டாது பேசுவார்:

''பரவை, உன் பேச்சில் உண்மை உண்டுதான். ஆனால், பரராச சிங்கன் பத்தொன்பதே வயது நிரம்பிய சிறுவன். அரசபாரத்தைத் தாங்குந் திறனற்றவன். இன்றைய அரசின் சூழ் நிலையில் திறன் மிக்க வீரனே மன்னனாகத் தேவை! பரராச சிங்கனால் அது முடியுமா, பரவை? முடிவாகக் கூறுகின்றேன்... அரசமுறைகளையோ, வழக்கங்களையோ இன்றைய நிலைமையிற் கவனிக்க முடியாது! நான் விரும்பி என் பட்டத்தைத் தம்பிக்கு அளிக்க முன் வரும்போது யார்தான் தடுக்க முடியும்?''

பரவை மௌனமாகி விட்டதோடு தலை நிமிர்ந்து சங்கிலிகுமாரனையும் பார்த்தாள்.

''அண்ணா!'' என்று அழைத்த சங்கிலி, ''இவ்வாறு செய்தாலென்ன?'' என்றான்.

''எவ்வாறு, தம்பி?''

''நீங்கள் முடியைச் சூட்டி மன்னனாகுங்கள். உங்களுக் உதவியாக, வலக்கை போல நானுதவுகின்றேன்...''

''தம்பி, என்னை நீ முற்றாகப் புரிந்து கொள்ளவில்லை. மக்களது பிணிகளைத் தீர்த்து அவர்களது மகிழ்வில் இன்பம் காண நான் ஆசைப்

படுகின்றேன். மேலும், மன்னனென்ற உருவில் ஒருவன் இருக்கும் போது உன் வீரமும திறனும் சிறிது மழுங்கவே செய்யும். உன் எண்ணப்படி ஆளும்போதுதான் நாடு நன்கு முன்னேற முடியும், தம்பி!''

''எப்படி இருந்தபோதிலும் மூத்தவர் இருக்க நான் முடி சூடுவது அழகல்ல...''

'மூத்தவன் இருக்கத்தானே, முடி சூட்டக் கூடாது தம்பி! நான் இல்லாது போனால் ..."

குறுக்கிட்டான, சங்கிலிகுமாரன் :

''என்ன வார்த்தைகள் கூறுகிறீர்கள், அண்ணா? அண்ணனென்ற உறவில் உங்களைத் தவிர ஒருவருமில்லை...''

''தம்பி அந்த உறவு நிலைக்க வேண்டும் என்றால், தந்தைக்கு நான் கொடுத்த வாக்குறுதி நிறைவேற வேண்டுமானால், இம் முடியை நீ ஏற்றே ஆக வேண்டும்...'

''என்னை இக்கட்டான நிலையில் நிறுத்துகிறீர்கள். மன்னனாகக்கூடிய தகுதி எனக்குண்டா?...''

''உண்டு, தம்பி. உண்டு?''

''எனக்குச் சிந்திக்கச் சிறிது அவகாசம் தாருங்கள்''

பரராசசேகரர் இப்போது குறுக்கிட்டார்:

''சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது, குமாரா? நாங்கள் முடிவாகக் கூறுவதை நீ ஏற்றேயாக வேண்டும். ஒப்புக்கொள், குமாரா?''

''ஒப்புக்கொள், அண்ணா!'' என்றாள், பரவை.

"உங்களுக்காக, உங்கள் மன நிறைவிற்காக இம்முடியை நான் ஏற்கிறேன்''

பரநிருபசிங்கர் தம்பியை மார்புறத் தழுவிக் கொண்டார்.

"தம்பி, உன் தலைமையின் கீழ் இவ்விராச்சியம் நலம் பெறட்டும்' என வாழ்த்துக்கள் கூறினார்.

அவ்வேளை பரவையைத் தேடித் தோழி ஒருத்தி வந்தாள். உதயவல்லி, வந்திருக்கிறார், அம்மா!''

பரவை எல்லாரிடமும் விடைபெற்று விரைந்தாள்.

'உதயவல்லி' என்ற பெயர் சங்கிலிகுமாரனின் காதுகளில் தெளிவாகக் கேட்டது. எல்லாரிடமும் விடைபெற்றுக்கொண்ட அவன் வேகமாக நந்தவனத்தை நாடி வந்தவன் 'திக்' பிரமை அடைந்து நின்றான்.

தான் காண்பது கனவா என்ற பிரமை ஏற்படவே, கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தவன் கண்களின் முன், நந்தவன முகப்பில் சிரித்தபடி பரவை நிற்க, அவள் கொவ்வை நிறக் கன்னத்தைக் கிள்ளியபடி கனகராயன் நின்றிருந்தான்.

10



# நீயே பட்டத்து ராணி!

அரண்மனையில் தனக்குத் தெரியாமலேயே எத்தனையோ விஷயங்கள் நடைபெற முடியும் என்பதைச் சங்கிலிகுமாரன் உணர்ந்து கொண்டான். இயற்கையின் இயக்கம் ஒவ்வொருவரிலும் செயல்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. ஒவ்வொருவரும் தத்தமக்குரிய வாழ்வை அமைத்துக்கொண்டே வளர்கிறார்கள் போலும்.

கண் முன்னால் தன் தங்கையின் கன்னத்தைக் கிள்ளியபடி ஆடவன் ஒருவன் நிற்க, அவள் சிரித்தபடி மலர்ந்து நிற்கின்ற காட்சியைக் கண்டான்.

"சீச்சீ! கையை எடுங்கள்... யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்...... பட்டப்பகலில் அதுவும் காலைவேளையில் வந்ததும் வராததுமாக இதுதானா?" எனச் சிணுங்கிய பரவையின் எழிற் கன்னத்தைக் கன்றிப்போகக் கூடியதாக, கனகராயன் கிள்ளியதோடு நில்லாது, "யாராவது பார்த்தால் என்ன?" எனக் குறும்பாகப் பேசவும் செய்தான்.

உதயவல்லியைக் காணும் ஆவலோடு வந்தவனுக்கு, இக்காட்சி முதலில் வியப்பையே அளித்தது. முதலில் தோன்றிய வியப்பு படிப்படியாக ஆத்திரமாக மாறுவதை அவனால் உணர முடிந்தும் தடுக்க முடியவில்லை.

ஒரு தங்கையின் தமையன் அவன்.

"ஒரு நாட்டின் இளவரசி இவள். இவளை நேசிக்க இவனுக்கு எப்படித் துணிவு வந்தது?"

'ஒரு நாட்டின் இளவரசன் நீ. கேவலம் ஒரு மந்திரியின் மகளைக் காதலிக்க எப்படித் துணிவு வந்தது? சேனாதிபதி சம்பகமாதாக்கரின் வழி வந்தவனுக்கு ஒரு இளவரசியை விரும்ப உரிமையில்லையா?"

சங்கிலி குமாரனின் கோபம் படிப்படியாக அடங்கி அவிந்தது. 'தங்கைக்கு எல்லா வழிகளிலும் ஏற்றவன் கனகராயன்' என்றமுடிவிற்கு வந்ததால், அவர்கள் அறியாது தன் மாளிகை திரும்பினான்.

'அடி பரவை நான் உன்னை இன்னும் சிறுகுழந்தை என்றே எண்ணிவந்தேன். அது எவ்வளவு தவறு' என எண்ணியபடி, அறையில் சிறுநடைபயின்று கொண்டிருந்தபோது, கனகராயன் வந்தான்.

இதுவரை சங்கிலிகுமாரன் காணாத கனகராயனாக அவன் தெரிந்தான். தன் மகோன்னத கனவின் வலது கை சிலவற்றைத் தன்னிடம் கூட மறைக்கின்ற அற்புதம், அன்று அவனுக்குத் தெரிந்தது.

''வா... கனகராயா? ஏது இக்காலை வேளையில்... மகிழ்ச்சியோடு காணப்படுகிருயே...?''

கனகராயன் முகத்தில் சங்கிலிகுமாரன் எதிர்பார்த்த எதுவித சலனமும் தோன்றவில்லை.

''சும்மா வந்தேன், இளவரசே! நாங்கள் இன்று கடற்கரைக்குச் செல்லும் நாளல்லவா?...''

கடற்கரை மணலிலே கையாலாகாத இளவரசனுக கட்டிய மணற் கோட்டைகள் சிதையவில்லை என்ற விபரத்தைத் தன் நண்பனுக்குக் கூற ஒரு கணம் விரும்பியவன், சற்று நிதானித்துக் கொண்டான்.

''ஆமாம், கனகராயா! மாலையில் கடற்கரையில் நீ எதிர்பார்க்காத சில விஷயங்களைக் கூறுகின்றேன்...''

''எதிர்பார்க்காதவையா...?'' என மந்தகாசமாகப் புன்னகைத்த கனகராயன், ''வருகிறேன், இளவரசே'' என எழுந்தான்.

''ஏன் அவசரப்படுகிருய், கனகராயா?''

கனகராயன் கலகலவென நகைத்தான்.

''மருத்துமாமலை வனத்து நாடகம் தொடர்ந்து நடைபெறுவதை நான் தடுக்கலாமா?''

''கனகராயா?...''

''ஏன் மறைக்கப் பார்க்கிறீர்கள், இளவரசே! மாளிகை வாசலில் மந்திரியார் அப்பா முதலி அவர்கள் வீட்டுப் பல்லக்கு இருக்கிறதே...?''

''இருந்தால்......?''

''உதயவல்லி தேவியார் இம்மாளிகையில் இருக்கிருர்...''

சங்கிலிகுமாரனின் முகத்தில் வீரனுக்கேயுரிய கம்பீரத்தோடு, மெல்லிய இழையாக வெட்கவுணர்வு திரை விரித்தது.

கனகராயன் சிரித்தபடியே விடைபெற்ருன்.

**ய**முனை ஏரியின் கிழக்குப் பக்கத்தில் எழிலுற அமைந்திருந்தது நந்தவனம். உலகின் நறுமலர்கள் எல்லாம் அங்கேதான் உளவோ எனும்படி, வர்ணஜாலங்களை வீசியபடி மலர்கள் தேன்சிந்தி அசைந்தன.

தற்செயலாக நந்தவனத்திற்குள் வந்தவனைப் போல, உதயவல்லியும் பரவையும் பேசிக்கொண்டிருந்த மலர் மண்டபத்தினுள் சங்கிலி குமாரன் நுழைந்தான். பெண்கள் இருவரும் எழுந்து நின்றனர். மலர்மண்டபத்து மலர்க் கொடிகள் இடை நெளித்து இவ்வளவு எழிலாக நிற்குமா?

''மன்னரே, தாங்கள் பெண்கள் தனித்திருக்கும் இடத்திற்கு உத்தரவில்லாமல் நுழையலாமோ?'' எனப் பரவை குறும்பாகக் கேட்டாள்.

''மன்னரா? இது என்ன புதிய விளிப்பு?...''

"மன்னர் தானே...?" என்று மெதுவாக முணுமுணுத்தாள் அப்பா முதலி மகள்.

அவன் விழிகள் குரலிற்குரியவளை நாடித் திரும்பின கருநாகம் என நெளிந்து கிடந்த பின்னலைக் கரத்தில் வைத்து முறுக்கியபடி நின்ற உதயவல்லியின் தோற்றம் அவன் மனதை ஒரு கணம் கவ்வியது. உடலோடு இணைந்து கிடந்த பளபளப்பான மல்மல் ஆடைகள் அவள் உடல் வளைவின் அற்புதங்களை அழகூட்டிக் காட்டின.

"பரவை யாரிந்தப் பெண்?..." எனக் கேட்டான், இளவரசன்.

தமையனின் நடிப்பைக் கண்ட பரவை தனக்குள் நகைத்துக் கொண்டாள்.

"உனக்குத் தெரியாதா, அண்ணா?"

தெரியாது என்பதற்கு அடையாளமாகப் பரிதாபமாகத் தலையை ஆட்டினான், சங்கிலி.

"உனக்கு மந்திரி அப்பா முதலியைத் தெரியுமோ?"

"அவரின்......?"

"ஏனண்ணா, அவசரப்படுகிறாய்...... இவளிடமே கேளேன். நான் மாளிகைக்குச் சென்று இவளுக்கு ஏதாவது சாப்பிடுவதற்கு எடுத்து வருகின்றேன். அதுவரை பேசிக் கொண்டிரு.. ஆனால், ஒன்று அண்ணா இவள் பேச மாட்டாள். பேசினால் ஓயவே மாட்டாள்......" எனக் கூறியபடி மாளிகை நோக்கித் தாவி ஓடினாள் பரவை.

"பரவை... பரவை...!" எனச் சங்கிலிகுமாரன் அழைத்தான்.

"ஏன் அவளை அழைக்கிறீர்களாம்!" தேனிலும் இனிய குரல் ஒன்று அவன் பக்கத்தில் எழுந்தது. அவன் சிரித்தபடி திரும்பினான்.

"உதயா......" பிரேமையின் அழைப்பாக அவன் நெஞ்சிலிருந்து வார்த்தை வந்தது.

"இளவரசே... என்னை ஏமாற்றிவிட மாட்டீர்களே?"

சகோடயாழின் நடு நரம்பு தெறித்தது போல ஓர் உணர்வு அவனைக் கவ்வியது.

"இது என்ன வார்த்தை, உதயவல்லி? உன்னை நான் ஏமாற்றுவதா? உனக்கு ஏன் இந்த வீண் சந்தேகம்?... .."

"இது வீண் சந்தேகமென்றால், என்னைவிடப் பாக்கியசாலி இல்லைப் பிரபு! உங்களை மன்னராக்க முடிவு செய்துள்ளனர் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட கணத்தில் இருந்து, என்னிதயத்தில் இனந் தெரியாத பீதி தோன்றுகிறது. மகிழ்வதற்கு மாறான உணர்வு தலை தூக்குகிறது.. இளவரசே, என்னை நீங்கள் ஏமாற்றி விடுவீர்களோ என்று கூடப் பயமாக இருக்கிறது........"

"உனக்கு யார் இதையெல்லாம் கூறினார்கள்?"

'பரவை கூறினாள்...... மன்னரானதும் இந்த அபலையை மறந்து விட மாட்டீர்களே?" என்றவள் உதடுகளில் தன் வலக்கரத்தைப்

பதித்துத் தடுத்த சங்கிலிகுமாரன், ''அன்பே, வீணை சந்தேகங் களுக்கு இடம் கொடுக்காதே? நான் மன்னனானால் பட்டத்து ராணி நீதான்......'' என்று அவளை அணைத்துக்கொண்டான்.

அவன் அணைப்பில் கட்டுண்டு கிடந்த உதயவல்லி மெதுவாக முகம் நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். விழிகளில் ஏனோ சொல் லொணாத சோகம் குடிகொண்டிருந்தது.

''உதயா......''

''பிரபு... எனக்கொரு சத்தியம் செய்து தருவீர்களா?......''

''என்னையே உனக்காகத் தந்தபோது, ஒரு சத்தியம் செய்வது தான் பெரிதா?, கேள், உதயா... ஆனால்......''

''ஆனால், என்ன இளவரசே...?''

''ஒருவரில் நம்பிக்கை அற்றுப் போகும் போதுதான் சத்தியம் கேட்பார்கள். அது போல......''

''அப்படியொன்றுமில்லை... உங்கள் மீது பரிபூரண நம்பிக்கை எனக்குண்டு! என் திருப்திக்காக சத்தியம் செய்ய வேண்டாம். ஒரே ஒரு வாக்கு மட்டும் தாருங்கள்.........''

''என்னவென்று, உதயவல்லி...?''

''நான் மன்னனானால் நீயே பட்டத்து ராணியாக இருப்பாய் என்று.........''

''பைத்தியமே, இவ்வளவு தானா......? நீ பட்டத்து ராணியானால் தான் நான் முடி ஏற்பேன். போதுமா?...''

''அவ்வளவே போதும், பிரபு'' என்ற அவள் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். விரைகுழலின் நறுமணத்தை மூகர்ந் ததால் சுயமிழந்த சங்கிலிகுமாரன், மெதுவாகத் தன் கரங்களால் அவள் மெல்லிடையைத் தழுவினான்.

உச்சி வானில் வானம்பாடிகள் சில இரைந்து கொண்டு சென் றன. உதயவல்லி அவன்பிடியிலிருந்து 'சட்'டென விலகிக்கொண்டாள்.

அவன் மெதுவாக மலர் மண்டபத்து இருக்கையில் அமர்ந்தான்; அவள் அருகே வந்து அமர்ந்தாள்.

''உதயவல்லி, நம் காதலை உன் தந்தையிடம் கூறி திருமணத்திற்கு ஆயத்தம் செய்யேன்...''

''ஐய, நான் ஆயத்தம் செய்வதா?... நல்லாய்த்தான் இருக்கு உங்கள் பேச்சு? நீங்கள் அல்லவா உங்கள் பெற்றோரிடம் கூறி...'' தொடர்ந்து அவளால் கூறமுடியவில்லை; நிலத்தைப்பார்த்தபடி மௌன மானாள்.

"அப்படியே செய்கிறேன், உதயா! என் பெற்றோரைக் கொண்டே நம் திருமணத்திற்கு ஒழுங்கு செய்கிறேன். ஆனால்..."

''ஆனால் என்ன, பிரபு? அபசகுனமாக...''

'இல்லே, உதயா! கள்ளத்தனமாக உன்னைச் சந்தித்து மகிழ்வதில் உள்ள தணியான இன்பம், திருமணமான பின் கிடையாது போய்விடுமே என்றுதான் கவலை..."

கலகலவெனச் சிரித்தாள், மந்திரி மகள்

"திருமணத்தை எண்ணிச் கவலைப்படும் ஆண்மகன் நீங்கள் ஒருவர் தான். கள்ளத்தனமாகச் சந்திப்பது உங்களுக்கு இன்பமாக இருக்கலாம் ஆனல்..."

"என்ன நீ கூட ஆனல் போடுகிருயே?"

"நீங்கள் ஆண்பிள்ளை! என்னைச் சந்திக்க இரவு வேளைகளில் பயப்படாது வரமுடியும்! அதுபோல என்னல் முடியுமா?...... மாளிகை உறங்கிய பின் மெதுவாக எழுந்து கள்ளனைப்போலப் பதுங்கிப்பதுங்கி வந்து சந்திக்க வேண்டும்! இப்படிக் கள்ளத்தனமாக எவ்வளவு காலந்தான் சந்திப்பதாம்? என் அவஸ்தை எனக்கல்லவா தெரியும்!'

"உதயவல்லி! அப்படி என்ன அவஸ்தையோ?" எனக் குறும்பாகக் கேட்டவனுககுப்பதில் கூறமுடியாதுதான் தவிப்பதை வெளிக் காட்ட விரும்பாத உதயவல்லி, கதையை மாற்றவிரும்பி, "என்ன பரவையை இன்னமும் காணேமே? "என்ருள்.

"என்னைத் துரத்தப் பார்க்கிருயா, உதயா?"

"இப்போது துரத்தினல் தானே துரத்தலாம்! திருமணமானபின், துரத்தமுடியுமா? காதலிக்கும்போது காதலியின் எண்ணப்படிதான்' இளைஞர் நடப்பார்களாம்! திருமணமானபின் தங்கள் எண்ணப்படி மனைவிமார் நடக்கவேண்டுமென விரும்புவார்களாம்!" என்ருள், உதயவல்லி.

"ஓகோ! இப்போது உன் விருப்பப்படி எல்லாம் நான் நடப்பதாகச் சுட்டிக் காட்டுகிருய். இல்லையா?"

''இது என்ன குதர்க்கப்பேச்சு? என் எண்ணப்படியா நடக்கிறீர்கள்?'

"பின் யார் எண்ணப்படி?"

சங்கிலியினது பேச்சிற்குக் குறும்புத்தனமாக ஏதாவது கூற வாய் திறந்த உதயவல்லி, "அண்ணு! அண்ணு!!" என்றழைத்தபடி பரவை ஓடிவரும் சத்தம் கேட்டதால், விலகி அமர்ந்து கொண்டதோடு' அவனுக்குக் கண்களினல் ஜாடை காட்டி எச்சரித்தாள்.

அதே நேரத்தில், ஏழூரதிபர் பரநிருபசிங்கர் மாளிகையில் அவர் மனைவி மாதவி தேவியாலும், மகன் பரராசசிங்கனுலும் புதியதொரு சிக்கலுக்கு வித்திடப்பட்டதோடு, பரநிருபசிங்கரின் மனதிலும் குழப்பத்தைத் தோற்றுவித்தது.

11



# உரிமைப் போர்

யாழ்பாண அரசின் மணிமுடியைத் தன் தலையிலே தாங்கவேண்டிய ஏழுரதிபர் பரநிருபசிங்கரது உள்ளத்தில் பிரளயம் ஒன்று உருவாகியது. அவருடைய மனைவி மாதவி தேவியாரின் வார்த்தைகளும், மகன் பரராசசிங்கனின் சொற்களும் அவரை நிலை தடுமாற வைத்தன.

அவர் மனம் குழம்பித் தவித்தது.

''நீங்கள் செய்தது மகா துரோகம்! பெற்ற மகனுக்கே துரோகம் செய்துவிட்டீர்கள்'' எனக் குமுறினாள், மாதவி தேவி.

''தேவி, நானா துரோகம் செய்தேன்? சிந்தித்துப் பார்த்தால் உண்மை தெரியும்...''

''சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது! நீங்கள் செய்தது துரோகமில்லாமல் வேறென்ன?''

''துரோகம்... என் துரோகத்தைக் கண்டுவிட்டாய்...? என் மகன் சுகமாக வாழவேண்டும் என்று கருதிச் செய்ததையா துரோகம் என்கிறாய்?''

''மகனின் நன்மை கருதி இருந்தால் உங்களுக்கு உரிமையான அரசை உங்கள் தம்பிக்கு அளிக்க முன் வருவீர்களா? உங்களுக்கு முடிபுனைய ஆசையில்லையெனில், அரசாளப் பலமில்லையெனில், உங்கள் மகனுக்குமா ஆசையில்லை! யாழ்ப்பாண சிம்மாசனத்தில் அமர்ந்து செங்கோலோச்ச வேண்டிய உங்களது மகன் கேவலம்—உங்களின் பின் ஏழுரதிபனாகத்தானா இருக்கவேண்டும்...?''

''வார்த்தைகளைக் கொட்டாதே? தேவி, என்னைத் தவறாக நீ கருதுகிறாய்? எனக்காமுடிபுனைய ஆசையில்லை? எனக்கா அரசாளப் பலமில்லை? இரண்டுமேயுள்ளன...... சிறுவனாக நான் இருந்தபோது, யாழ்ப்பாணத்தின் சிம்மாசனத்தில் ஒரு முறையாவது அமரவேண்டுமெனக் கனவு கண்டேன்!... அக்கனவு இன்று என்னைத் தேடிவந்தும் அதை ஏற்க மறுத்த உண்மைக் காரணம் என்ன தெரியுமா ?......'' என்ற பரநிருபர் தன் துணைவியை ஏறிட்டு நோக்கிவிட்டுத் தொடர்ந்தார்: "அரசாள்வதென்பது விளையாட்டன்று! புகழுக்காகவோ, பேருக்காகவோ ஆசைப்பட்டு முடி புனைந்தபின், அரசின் பாரத்தைத் தாங்க முடியாது அவதிப்படுவதிலும். திறமையுடையவர்கள் அரசாள்வதே நல்லது தேவி! உன் கணவனை மன்னனாகக் காண நீ விரும்புகிறாய்? அது நிறைவேறாதகாலை உன் மகனை மன்னனாகக் காண விரும்புகிறாய்? உன்மீது பிழையில்லை...!''

"பின் யார்மீது பிழை?" என மாதவி கேட்டதற்குச் சிறிதுநேரம் மௌனமாகவிருந்த பரநிருபர், நீண்டதொரு பெருமூச்சோடு பேசினார்:

"யாழ்ப்பாணவரசின் இன்றைய சூழ்நிலையின் மீதே பிழை! இச் சூழ்நிலை காரணமாகவே அரசைத் தம்பிக்கு அளிக்க முடிவு செய்தேன்; தந்தை என்னிடம் வேண்டும் முன்பே நான் செய்த முடிவிது! ........"

"நீங்கள் செய்த முடிவு நல்ல முடிவில்லை என்பது கூடவா உங்களுக்குத் தெரியவில்லை. அப்பா! சூழ்நிலையின் மீது பழியைப் போடுவதன் மூலம் நீங்கள் எனக்குரிய அரசை சித்தப்பாவிற்குக் கொடுத்து விட்டீர்கள்! நான் ஒரு மன்னனின் மகனாக வாழ வேண்டும்! அல்லது மன்னனாக வாழ வேண்டும்...! இரண்டுமற்று வாழ நான் விரும்பவில்லை. யோசித்துப் பாருங்கள்! இராச்சியத்தின் அரச பரம்பரையில் மாறுதலேற்படப் போகிறது .. என்னிடம் என்ன குறை கண்டீர்கள்? அரசாளுந் திறனில்லையா? திடமில்லையா?......" என்ற பரராசசிங்கனின் இளம் முகத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "குமாரா!" எனப் பரநிருபர் அழைத்தார்.

"மன்னனாக நீ ஆசைப்படுகிறாய்? ஆனால்......"

"ஆனால் .... ?"

"நீ என்றும் உயிரோடு வாழ வேண்டுமென்ற ஆசை எனக்கிருக்கிறது?" எனப் பரநிருபர் கூறியபோது மாதவியும், மகனும் திடுக்கிட்ட போதும் பரராசசிங்கன் தனது திடுக்காட்டத்தை வெளிக்காட்டாது நகைத்தான்.

"அப்படியானால் நீங்கள் உயிரோடு வாழ ஆசைப்பட்டு மன்னனாகாது ஒதுங்கினீர்கள். நான் உயிரோடு வாழ வேண்டும் என்பதற்காக எனக்கு முடியை இல்லாது செய்தீர்கள்... .. அப்படித்தானே?" என வினவினான்.

"அவ்வாறும் இருக்கலாம்... இந்த அரசியலே இன்று பொறாமை, சூழ்ச்சி, சதி என்பன பெருகிவிட்டன. அரசுக்குரிமையானவர்களை அழித்துவிடக் கங்கணங் கட்டிச் சிலர் அலைகிறார்கள். குமாரா, நான் உயிருக்குப் பயந்து முடியை மறுக்கவில்லை..."

"பின் எதற்காக மறுத்தீர்கள்! மறுத்த நீங்கள் உங்கள் மகனுக்கு அதை அளித்திருக்கலாமே?"

"தேவி, இன்றைய சூழ்நிலையில் வீரன் ஒருவனே இராச்சியத்திற்குத் தேவை..."

"பரராசசிங்கனுக்கு என்ன...?"

"அவன் சிறுவன், தேவி!"

பரராசசிங்கன் கோதிப்போடு குறுக்கிட்டான்.

(தொடரும்)



# சாவுமவளைத் தொடுமோ?



## ராஜிக்குட்டி

ஓடிவந்து இரு கைகளையும் கதவு நிலையில் பிடித்த வண்ணம் வாசலை மறைத்துக் கொண்டான் மகாதேவா.

"கௌரி! இந்த நேரத்தில் நீ என்னை விட்டுப் போவது சரியானதல்ல. நன்றாகச் சிந்தித்துப் பார்; இப்போது நான் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பு மிகவும் மகத்தானது என்பதை நீ அறிந்துங் கூட இப்படி நடந்து கொள்வது நியாயமானதா? எனக்குக் கொடுத்த வாக்கை நீ மீறலாமா?"-மகாதேவாவின் குரல் கொஞ்சுந் தோரணையிலிருந்தது.

"நான் கொடுத்த வாக்கை மீறுவதைப் பற்றிப் பேசுகிறீர்களே! ஆனால் எனது உணர்ச்சிகள் கட்டவிழ்ந்து, பரந்து எல்லையை மீறி நிற்கின்றனவே! அதை உங்களால் உணர முடியவில்லையா?"-கண்ணீருக்கிடையே கத்தினாள் கௌரி.

மகாதேவா வலது கையினால் தனது நெற்றியை இரு தடவை அடித்துக் கொண்டவன், கௌரியின் இரு தோள்களையும் இறுகப் பிடித்துக் கொண்டு, அவளது முகத்துக்கு நேராகத் தன் முகத்தை வைத்துக் கொள்கிறான்.

"சே! கௌரி! எனது நிலைமையை தெரிந்து கொண்டும் இப்படிப் பேசுகிறாயே. இன்னும் ஏழே ஏழு மாதங்கள் இருக்கின்றன சிற்பக் கண்காட்சிக்கு. அதில் பங்கு பற்றிப் பரிசு வென்று ஈழத்துக்கே புகழ் தேடுவேன் என்று எத்தனையோ பேர் நம்பிக்கைக் கனவுகள் கண்டு கொண்டிருக்கின்றனர். ஆரம்பத்திலேயே எனது வேண்டுகோளுக்கு மறுப்புத் தெரிவித்திருப்பாயானால், வேறொரு முயற்சியில் இறங்கியிருப்பேன். காலப் போக்கில் அழியவிருக்கும் உனது அற்புத அழகை அழியாத ஜீவ கலையாக்க வேண்டுமென்ற ஒரே நோக்குடன் தான் உன்னையே சிலையாய் வடிக்க முற்பட்டேன். ஏதோ பெருமையாய் தலையாட்டி இந்த ஒரு மாதமாய் வேண்டிய நேரமெல்லாம் என் முன்னால் நான் விரும்பியபடியே இருந்து வந்தாய்-இப்போதுதான் உருவ அமைப்பு ஓரளவு நிர்மாணமாகியிருக்கிறது. இப்போது ஏதோ பைத்தியம் பிடித்தவள் மாதிரி, எனது உள்ளத்திலிருந்தெழும் புனிதமான கலையுணர்வுகளோடு, உனது உள்ளத்திலிருந்து பீறிட்டெழும் வக்கரித்த உணர்ச்சிகளை வைத்துப் பேரம் பேசி நிற்கிறாய்." - மகாதேவாவுக்கு அழுகை கூட வந்து விட்டது.

"நீங்கள் தான் என்னைத் தெரியாமல் பேசுகிறீர்கள். என்னை அரை நிர்வாணமாக இருக்க வைத்து, நீங்கள் சிலை செதுக்கும் போதெல்லாம் எனது மனம்

ஆசிரியர் : கந்தன் மரத்தில் இருந்து விழுந்தான் என்ன காலம் ?

மாணவன் : கஷ்டகாலம்

அ. இராசநாயகம்

---

எந்தெந்த நிலையில் இருந்து வருகிறது என்பதை எப்படிச் சொல்வேன்? சாகுந்தாப் பறவைகளில் ஆண் பறவை எந்நேரமும் அருகில் நின்று பெண் பறவையைப் பரவசப் படுத்திக் கொண்டேயிருக்குமாம். பெண் பறவை பரவச மிகுதியால் சேர வரும் போதெல்லாம் எட்ட எட்டச் சென்று நின்று சித்திரவதை செய்யுமாம். அது போலத்தான் நீங்களும் என்னைச் சித்திரவதை செய்கிறீர்கள். மணமாகி மூன்று மாதங்களில், இப்படி உணர்ச்சிகளுடன் என்னைப் போராட வைத்து ஒரு பரீட்சையா?" கௌரி ஆவேசத்துடன் பேசினாள்.

மகாதேவா கௌரியின் தோள்களிலிருந்து கையை எடுத்துவிட்டு இரண்டடி பின் சென்று நின்றுகொண்டான்,

"உணர்ச்சி! உணர்ச்சி! சே! இந்த உணர்ச்சிக்கு நீ காணும் அர்த்தம்தான் என்ன ? கௌரி! நான் உன்னை எனது நெஞ்சார நேசிக்கிறேன். ஆனால் இந்த சமயத்தில் உன்னை என்னால் இச்சிக்க முடியவில்லை. இப்போது எனது ஒரே ஒரு நோக்கம் சிலை! அது முடியவேண்டும்! அது முடியும் வரை என்னை எந்தவித உணர்ச்சிகளும் அடிமைப்படுத்த முடியாது; நான் உன்னை அரை நிர்வாணக் கோலத்திலோ, முழு நிர்வாணக் கோலத்திலோ, எக்கோலத்தில் பார்த்தாலும் சிலைக் கண்ணால்தான் பார்க்கிறேன். எனக்கு ஊனக்கண்ணோ, காமக் கண்ணோ இப்போது இல்லை!"– மகாதேவா கத்தினான்.

மகாதேவாவின் பேச்சு, தன்னை ஏதோ தாழ்வாகப் பேசுவதாகக் கௌரியை எண்ண வைத்துவிட்டது. ஆத்திரத்துடன் மகாதேவாவை ஒரு புறம் தள்ளிவிட்டு விடுவிடுவென்று வெளியே சூட்கேசுடன் போய்விட்டாள் கௌரி.

மகாதேவாவுக்கு என்னசெய்வதென்றே புரியவில்லை. அப்படியே சிலையானான். அவன் கண்கள் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டிருந்தன.

0 0 0

மகாதேவா ஒரு சிற்பி. ஆமாம். ஆசியாவில் அவனுக்கிணை அவனேதான். அவ்வளவுக்குக் கைத்திறன் படைத்திருந்தான் மகாதேவா. சிறுவயதிலிருந்தே இத்துறையில் ஆர்வங் காட்டி வந்த மகாதேவா இறுதியில்பெரியவனாகி விட்டான். இவனுடைய சிருஷ்டிகளில் சிறந்ததென்று கருதப்படும் புத்தர் சிலையொன்றுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த "ஆசிய கவின் கலைக் கண்காட்சி" யில் பரிசு கிடைத்தது. இன்னும் இதுபோன்ற பரிசுகளை அவ்வப்போது வென்றெடுத்து தனக்கு மட்டுமன்றி தன் நாட்டிற்கும் பெரும் புகழைச் சம்பாதித்துவிட்டிருந்தான் மகாதேவா. அரசாங்கம் மகாதேவாவை நல்ல முறையில் கௌரவித்துப், பாராட்டி அவனை மேலும் இத்துறையில் ஊக்குவித்தது. கலாச்

சார அமைச்சு உபகாரச் சம்பளம் வழங்கி வந்தது. இத்தனைக்கும் மகாதேவாவுக்கு வயது இருபத்தேழுதான். இக் குறுகிய வயதிலேயே புகழின் உச்சியில் மகாதேவா நின்ற இக்கட்டத்தில் கௌரி அவனது வாழ்க்கையில் குறுக்கிட்டாள் அழகுத்தேவதையான கௌரியின் எழிலில் மயங்கிய மகாதேவா பலவிதமான எதிர்ப்புகளைச் சம்பாதித்துக் கொண்டு, அனாதையான அவளையே மனைவியாக்கிக் கொண்டான்.

மகாதேவாவுக்கு மணமாகி மூன்று மாதங்கள் சென்றபோது யப்பானில் நடக்கவிருக்கும் உலகச் சிற்பக் கண்காட்சி பற்றிச் செய்தி கிடைத்தது. கலாச்சார அமைச்சர், இக் கண்காட்சியில் மகாதேவாவைப் பங்கு பெறக் கோரி தம் கைப்படவே ஒரு கடிதம் எழுதியிருந்தார். இன்னும் ஏராளமான நண்பர்களிடமிருந்து மகாதேவாவுக்குக் கண்காட்சியில் பங்கு பற்றும்படி அன்பு வேண்டுகோள்கள் வந்திருந்தன. எப்படியாவது தனது திறமையின் மூலம் உலகத்திலேயே சிறந்ததொரு சிற்பியென்று பெயரெடுக்க வேண்டுமென்று மகாதேவாவுக்கு நீண்ட நாளாக ஒரு ஆசை—தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சிக்கு இப்படியொரு சந்தர்ப்பம் கிடைத்தது கண்டு மகாதேவா மகிழ்ந்து போனான்.

கௌரியை என்று கண்டானோ அன்றே மகாதேவாவின் மனதில் ஒரு ஆசை ஏற்பட்டு விட்டிருந்தது. கௌரியின் அழகுச் சொரூபத்தை அழியாத அற்புதச் சிலையொன்றாகவடித்துவிட வேண்டுமென்பதுதான் அந்த



மாமி: என்ன, என் மகன் என்னோடு கடு கடு சிடு சிடு என்று நிற்கிறான்.

மருமகள்: எல்லாம் என் ஏற்பாடுதான்.

மாமி: !!!!!!

சுந்தர்

ஆசை. கௌரியையே சிலையாய் வடித்துக் கண்காட்சிக்குக்கொண்டு போனாலென்ன என்று சிந்திக்க வாரம்பித்து, இறுதியில் "அது தான் சரி" என்ற முடிவுக்கும் வந்தான். அதைத் தவிர தகுதியானதொன்று வேறெதுவும் அவனுக்குப் படவில்லை.

கௌரியிடம் இது பற்றித் தெரிவித்தபோது அவள் பெரிதும் சங்கடப்பட்டாள். எப்படியோ அவளைச் சரிசெய்து, சிலை முடியும் வரை வேண்டிய நேரமெல்லாம் விரும்பியபடி கணவனுக்கு முன்னால் இருந்து உதவி செய்வதாக கௌரியிடமிருந்து வாக்கும் பெற்றிருந்தான். ஆனால்......

உருவ அமைப்பு மட்டும் நிர்மாணமாயிருக்கும் இக் கட்டத்தில், கொடுத்த வாக்கையும்

மீறி, கணவன் தன்னில் பாரா முகமாகவிருக்கிறான் என்று குற்றஞ் சாட்டி மகாதேவாவை விட்டுப் பிரிந்தே போய்விட்டாள் கௌரி...!

0 0 0

மகாதேவா துரும்பாகி விட்டிருந்தான். கௌரி கொடுத்த ஏமாற்றத்தினால் மனம் வெதும்பிய மகாதேவா உணவைமறந்து, உடல் நலனை மறந்து பைத்தியம் பிடித்தவன் போலாகிவிட்டிருந்தான். அவனது கண்கள் எந்நேரமும் கண்ணீரைக் கொட்டு கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தன. தனது உமிழ்நீரை வெளியே துப்புவதற்குக் கூடச் சக்தியற்றிருந்தான். தனக்கு, தனது இனத்துக்கு, தனது நாட்டுக்கு புகழைத் தேடிக் கொள்ளவிருந்த ஒரு சந்தர்ப்பத்தைப் பாழடித்து விட்டிருந்த கௌரியை நினைக்க நினைக்க மகாதேவாவுக்கு மனம் பொருமியது.

மகாதேவாவின் நிலை அவனது நெருங்கிய நண்பர்களுக்குப் பெருங் கவலையளித்தது. நிறைய நாட்களிருப்பதாயும், வேறெதாவதொரு முயற்சியில் ஈடுபடும்படியும் நண்பர்கள் மகாதேவாவை வேண்டினார்கள். மகாதேவா ஒரேயடியாகமறுத்து விட்டான். அவனது உள்ளத்தைக் கௌரியின் இணையற்ற தெய்வீக எழில் நிறைத்துக் கொண்டிருந்தது. கௌரியின் சிலையை முடிக்காதவரையில், இனிமேல் உளியையே தொடுவதில்லையென்றுசொல்லிவிட்டான் மகாதேவா—

இந்த நிலையில் ஒரு நாள் திடீரென்று மயக்கம் போட்டு விழுந்த மகாதேவா இரண்டு நாளாக நினைவிழந்துகிடந்தான். மகாதேவாவின் நண்பர்கள் அடைந்த துயரத்துக்கு அளவேயில்லை மகாதேவாவை இழந்தால்... தமக்கென்ன, இந் நாட்டுக்கே ஒரு பெரிய நட்டமெனக் கருதினார்கள்.

மகாதேவாவின் நண்பர்களிற் சிலர் கௌரியிடஞ் சென்று மகாதேவாவின் பரிதாப நிலையையும், நாட்டுக்கு நேரவிருக்கும் பேரிழப்பையும் கூறி, மகாதேவாவிடம் திரும்பவும் அவளை வரும்படி கெஞ்சிக் கேட்டனர். கௌரி முதலில் மறுப்புத் தெரிவித்த போதும், மகாதேவா சாகும் நிலையில் இருக்கிறான் என்பதை அறிந்ததும் நெகிழ்ந்து போனாள். தான் கொண்ட வைராக்கியத்தைத் தளர்த்திக் கொண்டாள். மனதை மாற்றிக்கொண்டு மகாதேவாவைக் காண விரைந்தாள்.

0 0 0

கௌரியின் குரலைக் கேட்ட மகாதேவா கண் விழித்துப் பார்த்தான். கௌரியின் வருகை மகாதேவாவுக்கு உடலில் ஒருதெம்பை ஏற்படுத்தியதானாலும், அவனது உடலில் இரத்தம் வலுவாக வற்றிப்போயிருந்தது.மகாதேவா மீண்டும் மனிதனுவதானால் அவனுக்கு உடனடியாக ரத்தம் தேவையென்று டாக்டர் சொல்லி விட்டார். மகாதேவாவினது நண்பர்கள் பலர் அவனுக்கு இரத்தம் தர முன் வந்தனர். ஆனால்என்ன துரதிருஷ்டம்! அவர்கள் ஒருவரது ரத்தம் கூட மகாதேவாவின் இரத்தத்துடன் சேரவில்லை. கலங்கிய கண்களுடன் தன் இரத்தத்தைக் கொடுக்க

முன் வந்தாள் கௌரி. கௌரியின் ரத்தம் மகாதேவாவின் இரத்தத்துடன் சேர்ந்தது. கௌரியின் இரத்தத்தில் மீண்டும் மனிதனுனுன் மகாதேவா.

இப்போது கௌரியின் எண்ணமெல்லாம்மகாதேவாவை எந்த வகையிலும் திருப்திப் படுத்த வேண்டும் என்ற அளவிலேயே இருந்தது. தனது உருவச் சிலைக்குப் பரிசு கிடைத்தாலென்ன, கிடைக்காவிட்டாலென்ன, மகாதேவாவின் மனச் சாந்திக்காகவேனும் சிலை செதுக்குவதில் அவனுக்குத்தனது பூரண ஒத்துழைப்பைக் கொடுப்பதென முடிவு செய்து கொண்டாள்.

கண்காட்சிக்கு இன்னும் ஐந்து மாதங்கள் மட்டுமே இருந்தன. கௌரியின் மன மாற்றம் மகாதேவாவுக்குப் பெரிதும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. இராப்பகலாக சிலை செதுக்கும் வேலையில் ஈடுபட்டான். வேண்டிய நேரங்களிலெல்லாம், அவன் விரும்பியபடியே முகம் சுளிக்காமல் "போஸ்" கொடுத்து வந்தாள் கௌரி.

மகாதேவா எதிர்பார்த்ததுக்கு மேலாக சிலை அற்புதமாக அமைந்துவிட்டது. குளித்துவிட்டு நீர் மொண்டு கொண்டு வருவதாக அமைந்திருந்த அச்சிலையில் அற்புத அமைப்பைக் கண்ட கௌரி சிலையையும், தன்னையும் அடிக்கடி பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனுள். இப்போது தான் ரசனை அவள் பங்கில் திரும்பியது.

சிலையை முடித்தமகாதேவா, நெஞ்சார கௌரியைதான்நேசிக்கிருன் என்பதை வெளிப்படுத்துவதாக, அவனைப் பல வழிகளிலும் இன்புறச் செய்து கொண்டிருந்தான். கௌரி மகாதேவாவைக் கண்டு கொண்டாள்.

0 0 0

யப்பானில் நடந்தேறிய உலகச் சிற்பக் கண்காட்சியில் மகாதேவாவின் "கௌரிச் சிற்ப"த்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது. அப்பப்பா! பாராட்டுதல்களில் திக்குமுக்காடிப் போனுன் மகாதேவா. ஈழத்துக்குத் தேடிக் கொடுத்த புகழ்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போலமைந்த இவ்வெற்றியை எண்ணி எண்ணிப் பூரித்துப் போனுன் மகாதேவா. அரசாங்கம் மகாதேவாவை வாயார வாழ்த்தியது. பெரும் பெரும் பிரமுகர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிந்து கொண்டிருந்தன. இலங்கை கவின் கலைக்கழகம் மகாதேவாவுக்குப் பிரமாண்டமான விருந்துபசாரமளிக்கத் தீர்மானித்தது.

கலாச்சார அமைச்சர் தலைமை வகிக்கும் இவ்விருந்துபசாரத்துக்கு மகாதேவாவும் கௌரியும் அழைக்கப்பட்டிருந்தனர். விருந்தில் கலந்து கொண்ட பல பிரமுகர்கள் மகாதேவாவின் கலைத்திறனை வியந்தும் நயந்தும் போற்றிப் பேசினர். இறுதியில் மகாதேவா நன்றி கூறுகையில்,

"உண்மையிலேயே இவ்வழகிய சிலையை வடித்ததற்கான பெருமையில் எனக்கு சிறிதளவு பங்குதான் உண்டு. சாகும் நிலையில் இருந்த எனக்குத் தன் இரத்தத்தையே கொடுத்துப் புனர்வாழ்வளித்து, என் நாட்டுக்குப் புகழைத் தேடிக்கொடுக்

கச் சந்தர்ப்பம் அளித்த எனது மனைவிக்குத்தான் இந்தப் பெருமையில் முக்காற் பங்கு சேர வேண்டும். தவிர இது என் மனைவியின் சிலையே......

"படீர்"-! கௌரி இருந்த இடத்திலேயே மேஜை மீது மயக்கம் போட்டு... சே! மாரடைப்பால் விழுந்து இறந்துவிட்டாள். மகாதேவாவின் புகழ் மொழிகளைத் தாங்கும் சக்தி கௌரியின் மெல்லிதயத்துக்கு இல்லைப் போலும்!

0 0 0

கௌரியின் இறப்பையொட்டி, மகாதேவாவுக்கு ஆறுதல் சொல்லப் பலர் அவன் வீட்டுக்குச் சென்றனர். அங்கு கௌரியின் சிலையின் பக்கத்திலேயே இருக்கும் மகாதேவா அவர்களையெல்லாம் பார்த்துஏதோபிரமை பிடித்தவன் போலக் கத்துகிறான்.

"ஏன் வந்திருக்கிறீர்கள்? கௌரி செத்துப் போய்விட்டாளென்று? நீங்களெல்லாம் மடையர்கள்! உங்களுக்கு மூளையிருக்கிறதா? கௌரி சாகவில்லை! ஆமாம்; அவள் எப்படிச் சாக முடியும்? உங்களுக்கு முன்னால் இப்போது நின்று பேசுவது யார்? நானா?...இல்லை ..... அது கௌரி ஆமாம்.. ...கௌரி தந்த ரத்தம் பேசுகிறது. இந்தச் சிலை!...... கௌரியின் சிலை! இதைச்செதுக்கியது யார்? நானா? இல்லை. கௌரி! ஆமாம்! கௌரி தந்த இரத்தம் செதுக்கியது!.. இன்று நம் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் புகழைத் தேடிக் கொடுத்தது யார்? நானா? இல்லையே! கௌரி! ஆமாம்!-கௌரி தந்த இரத்தம்! என்னுடைய உயிர் இருக்கும் வரை, இந்தச் சிலையிருக்கும்வரை, எம் நாட்டுக்கு இச்சிலையால் ஏற்பட்ட புகழ் இருக்கும் வரை கௌரி எப்படிச் சாக முடியும்? சாவுமவளைத் தொடுமோ?"...

கௌரியின் சிலையைக் கட்டிக் கொண்டு குலுங்கினான் மகாதேவா.

வந்திருந்தவர்களது கண்கள் கண்ணீரைக் கொட்டின. அவர்களது இடக் கண்கள் இரத்தம் கொடுத்துக்கலை வளர்த்து மடிந்த கௌரிக்காக அழுதன. அவர்களது வலக் கண்கள் பார்புகழும் சிற்பியின் பரிதாப நிலைகண்டு அழுதன!

மகாதேவாவின் உடல் இன்னும் குலுங்கிக்கொண்டிருந்தது. கௌரி கொடுத்த இரத்தம் கண்ணீராகிக் கௌரியின் சிலை மேலே விழுந்து கொண்டிருந்தது

●

## பயிற்சி மொழி

அந்நிய மொழி பயிற்சி மொழியாக இருப்பதனால் நமது குழந்தைகளின் மூளைவளர்ச்சி தடைபட்டுப் போகிறது. அது நரம்புத்தளர்ச்சியை உண்டாக்குகிறது. நெட்டுருப் போட்டு ஒப்பிப்பதற்கும், சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளையாக மாறுவதற்கும் அந்நியப் பயிற்சி மொழி காரணமாகிறது; சிந்தனையை அழித்து விடுகிறது; பெற்ற அறிவைக் குடும்பத்துள்ளேயோ, மக்களிடையே பரப்புவதற்குத் தடையாக இருக்கிறது;

மகாத்மா—காந்தியடிகள்

*Registered at the G. P. O. as a Newspaper in Ceylon.*

வெளிவந்துவிட்டது!

வெளிவந்துவிட்டது!




உயர்வகுப்புகளில் தாவரவியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு உகந்தது.

எல்லாப் பிரபல புத்தகசாலையிலும் கிடைக்கும்

இப்பத்திரிகை 'விவேகி' சொந்தக்காரருக்காக யாழ்ப்பாணம் 32, கண்டிவீதியிலுள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் 15-6-67 இல் பதிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.